விலை ரூபா 1-00

# உதயசூரியன்

UTHAYASURIYAN

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

> தமிழ் நம் ரத்தத்தோடு ரத்தமாகக் கலந்துவிட்ட மொழி; நாம்தான் அதை மறந்திருந்தோமே தவிர தமிழ் நம்மை மறக்க வில்லை.
>
> -பேரறிஞர் அண்ணு-

கதிர் 1 | திருவள்ளுவராண்டு 2011 | 30-1-81 | வெள்ளிக்கிழமை | ஒளி 18

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS RECEIVED 1981-2-03 PERIODICALS DIVISION LIBRARY

## சுதந்திரத் தீ மூட்டிட சூழும் பகை விரட்டிட

# தென்தமிழ் ஈழத்தில் திரளும் மக்கள் கடல்!



## மாசி 2-ல் உகந்தையில் கிராம யாத்திரை ஆரம்பம்!

நான்கு நிலவளமும் நிறைந்தநாடு - நற்றமிழ் உலாவும் வீடு - பண்டைத்தமிழர் பண்பாம் காதலும் வீரமும் கைகோத்து உலாவும் பூமி - திரைகடல் ஓசையும் - தென்னஞ்சோலைகளின் சலசலப்பும் தேனுகக்காதி ணில் பாயும் திருவிடம்- தென் தமிழ் ஈழம்!

அங்கேதான் அலைகடலென தமிழ்ப்பேசும் மக்கள் அணிவகுக்கப் போகின்ருர்கள். ஆம்! சுதந்திரத்தீயை மூட்டி சூழ்ந்து வரும் பகையை வெட்டிவீழ்த்திட சுடர் முகத்தோர் கிராமயாத்திரை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

துரோகத்தைத் துவம்சம் செய்யும் தமிழ்த் தெய்வம் - துள்ளிவரும் வேலவன் - அழகன் முருகனின் உகந்தை மண்ணிலிருந்து மாசித்திங்கள் 2ம் நாள் ஆரம்பமாகின்றது வரலாற்றுப் புகழ்மிக்க கிராம யாத்திரை!



1976 ம் ஆண்டு வட்டுக் கோட்டையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில்-- 1977 ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழீழத்தை மீட்டே தீரவேண்டுமென தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் தலைவர்களுக்கு கட்டளையிட்டிருக்கிருர்கள்.

அளித்த கட்டளையை நிறைவேற்றவும் அதற்கு மக்களைத் தயார் நிலையில் வைக்கவுமே தமிழீழம் முழுவதும் கிராம யாத்திரை நடைபெறவிருக்கிறது.

அடுத்தடுத்து சிறிலங்காவில் ஆட்சிபீடம் ஏறும் அரசாங்கங்கள் எல்லாம் தமிழின சங்காரமே தங்களது குறிக்கோளாகச் கொண்டு இயங்குகின்றன-- அதிலும்-- 1977ல் அந்நிய நாடாம் சிறிலங்காவின் அரியாசனத்தில் அமர்ந்து விட்ட யு. என். பி. யினர் இன சங்காரம் மட்டுமல்ல---- இலங்கைத் தீவில் உள்ள (சிறிலங்கா--தமிழீழம்) ஏழை-- எளிய பாட்டாளி மக்களையெல்லாம் வாட்டி வதைத்து அவர்களை எலும்பும் தோலுமாக்கி அழகு பார்க்கின்றனர்.

இந்தக் கொடுமைக்கும் ஒரு முடிவுகட்ட-- முதலாளி வர்க்க அரசாங்கத்தின் முதுகெலும் புடைக்க-- சாமான்ய மக்களின் சகாப்தம் ஒன்றினை உருவாக்கவுமே தமிழீழ விடுதலை இயக்கமாம் தமிழர் விடுதலை கூட்டணியினர் தங்களது தலைவர் அமிர் அவர்கள் தலைமையில் கிராம யாத்திரை செய்ய விருக்கிருர்கள்.

எழுச்சியோடும் இன உணர்ச்சியோடும் நடைபெறவிருக்கும் இந்த யாத்திரையில், தமிழீழத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்கிருர்கள்.

தென் தமிழ் ஈழத்தில், தலைவர்களும், அவர்களது ஆணைக் கடங்கி பணியாற்றும் ஆயிரமாயிரம் தொண்டர்களும் ஆற்றப்போகும் இந்த மாபெரும் பணி அறிந்து ஆளுங்கட்சியினரும் அவரது அடிவருடிகளும் தமிழ்த் துரோகிகளும் தொடைநடுங்கிக் கிடக்கின்ருர்கள் என்று நமக்குக்கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

## தமிழை அரசாங்கம் கொலை செய்கிறது!

சர்வசன வாக்குரிமைப் பொன்விழாவை (1931-1981) முன்னிட்டு இலங்கைத் தபால் திணைக்களம் முத்திரை ஒட்டிய தபால் உறை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்தக் தபால் உறையில் 'பொன் விழா' என்பதற்குப் பதிலாக 'பொர்ன்விழர்' என்று அச்சடிக்கப்பட்டுள்ளது.

இப்படி-- பல வழிகளாலும் இந்த அரசாங்கம் தமிழைக் கொலை செய்து கொண்டேயிருக்கின்றது!

## இராசதுரை பேச்சின் எதிரொலி எம். ஜி. ஆர் தர்மரா? கர்ணனு?

உலகத் தமிழ் மாநாட்டில் உரையாற்றிய சிறிலங்கா அமைச்சர் இராசதுரை எம். ஜி. ஆரை தர்மருக்கு ஒப்பிட்டுப் பேசினுர்.

அவர் பேசுகையில், பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் தமிழகத்தில் மீண்டும் உலகத் தமிழ்மாநாடு நடைபெறுகின்றது. இது, வனவாசம் முடிந்து பாண்டவர் நாடுதிரும்பி தருமர் ஆட்சி பீடம் ஏறிய சம்பவத்தை நினைவுபடுத்துகின்றது என்று குறிப்பிட்டார்.

இராசதுரையின் இந்தப் பேச்சுக்குப்பின் எம். ஜி. ஆர் பேசுகையில், சிறிலங்கா அமைச்சர் தன்னை கர்ணனுக்கு ஒப்பிட்டதாகக் கருதிக்கொண்டு பேசினுர்.

கர்ணன் நம்பிக் கெட்டவன். நான் அப்படியாரையும் நம்பிக் கெடவில்லை. எனக்கு நல்லது எனப்பட்டதைச் செய்கின்றேன். இப்படி எம்.ஜி.ஆர்.பேசினுர்.

## இலங்கையில் தமிழ்த் துரோகிகள்!

கலைஞர் கருணுநிதி அவர்கள் முரசொலியில் எழுதியுள்ள கடிதமொன்றில் தமிழர்கள் தாக்குண்டு அழிவதைப் பார்த்தும் பாராதது போல் இருந்து கொண்டு பதவிச் சுகம் தேடும் தமிழர்கள் இலங்கையில் இருக்கிருர்கள் என்று குறிப்பிட்டிருக்கின்ருர்.

இலங்கையில் உள்ள இந்த விபீடணர்கள் யாரென்ற விபரம் எல்லாம் கலைஞர் அவர்களுக்கு தெரியாமல் இப்படி எழுதமாட்டார்.

## கழுதைக்கு சேலை கட்டினுல் குதிரையாகுமா?

அமைச்சர் தேவநாயகத்தின் சிபார்சின் பேரில், பொத்துவில்தொகுதியின் யு.என்.பி. நியமன எம்பியான திருமதி பத்மநாதன் இரங்கநாயகி அவர்கள், உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டு ஏதோ அரும்பெரும் சொற்பொழிவு ஆற்றியதாகவும் அதைக் கேட்டு தமிழகத்து மக்களெல்லாம் உச்சி குளிர்ந்து விட்டது போலவும் சீறிலங்கா வானெலியும் அரசாங்கத்தின் 'கசெட்' ஆக விளங்கும் டெயிலி நியூஸ் ஏடும் ஊரெல்லாம் பறையடித்தன.

அம்மையார் அவர்கள் ஆராய்ச்சி மாநாட்டில் வகுப்புவாத யு. என். பி. ஆட்சிக்குத் தான் வக்கலாத்து வாங்கிப் பேசினுர் என்பதைத் தவிர அவர் வேறென்றும் அங்கே வெட்டிப்பிளக்கவில்லை!

**தமிழ் ஈழம் தமிழர் தாகம்**

# வரலாறு படைப்போம், வா வா தமிழா!

நீலாவணைக்கு நிக ரெது சொல்வீர்!
நிலமதில் வீர நெருப்பே பொங்கும்
நாலா புறமும் பகையது வரினும்
நடுவினில் நின்றே நமனாய்ச் சிலிர்க்கும்
வேலா? அம்பா? விழி எனத் தோன்றும்
வீடுறை பெண்கள் விளக்குமாறோடு
ஆலகால விஷ மெனப் பாய்வர்
அருந்தமிழ்த் தாயை அயலவன் தொட்டால்!

பல்லோர் போற்றும் பழம்பதி மண்டூர்
படிதேன் வாச பலாச்சுளைத் தமிழை
சொல்லேர் உழவர் சொரியுமோர் பூமி
சுழலும் காற்றும் சுதந்திரம் பாடும்
கல்லா றென்னும் காஞ்சிமா நகரம்
கடல் சூழ் ஈழக் கரையிலே ஈர்க்கும்
வெல்லா வெளி யெனும் பெயரே விளக்கும்
வீரர்தம் கோட்டம்! வீழ்ந்ததே இல்லை!

கொஞ்சும் அழகுக் கோதையர் ஊராம்
குறுமண் வெளியவர் குறு நகை ஒன்றே
வெஞ்சமர்க் களத்தில் விரோதியை வீழ்த்தும்
விழி மேல் புருவம் வில்லாய் வளையும்
பஞ்சமே யில்லை பாடும் மீன் நாட்டில்
பத்தினி கண்ணகி போ லெம் பெண்கள்
வஞ்சக ஆட்சி வாழா தொழிப்பார்
வாளின் செயலவர் வாயே செய்யும்!

ஆரைக் கீரை போ லொரு மருந்து
அவனியில் உண்டோ? அது போல் மக்கள்
ஆரையம் பதியில் வாழ்வோர்; அவர் தம்
ஆவியைப் போல அருந்தமிழ் அன்னை!
ஊரைக் கலக்கும் உரிமைக் காரர்
உணர்ச்சிக் கடலே ஓடும் எங்கும்
வேரை அறுக்கும் விடுதலை முரசம்
வெவ்வே றூரில் வெடித்துக்கிளம்பும்!

காலையர் ஊராம் கல்லடி என்பார்
கத்தியின் முனையிலும் காலடி வைப்பார்
கோழைகள் இல்லாக் கோட்டை! பகையைக்
குத்தியே அழிப்பார்; குறியில் தவறார்!
வாழையைப்போல வளருமிக் கூட்டம்
வரலா றென்று புதிதாய் எழுதும்
நாளையே மலரும் நம் தமிழ் ஈழ
நாட்டினை ஆளும் நாயகர் இவரே!

கொண்ட கொள்கை மாறாத் தமிழர்
கோமளத் தமிழின் கொடும்பகையோடு
சண்டை யென்றால் சர்க்கரைப் பொங்கல்
சந்தி வெளியூர் சாகாப் பெருமை

பண்டைத் தமிழர் பண்டாய் மானம்
பழுதில்லாத வீரம், காதல்
கொண்ட தெங்கள் கறுவாக் கேணி
கோர கல்லிமடு ஓர் கோட்டம்!

கிள்ளைத் தமிழைக் கேட்டால் போதும்
கிளர்ச்சி கொள்வார் கிண்ணை யூரார்
தெள்ளுதமிழைத் தேனாய் உண்பார்
தேடிப் பகையைத் தேளாய் மிதிப்பார்
துள்ளிப் பாயும் வேலைப் போல
துரோகம் எங்கே துளிர்த்த போதும்
கிள்ளி எறிவர் கிரானைச் சேர்ந் தோர்
கீறிப் பிளப்பர் கொம் மாது றையார்!

வாழைப்பழம் போல் வாய்ந்த தமிழ்
வாழைச் சேனை ஊரார் வாயில்
ஆழச் சுவையை அள்ளிக் கொட்டும்
அமுதும் தேனும் அதிலே தோற்கும்!
தாழம் பூப் போல் தமிழின் வாசம்
தாவி ஓடி தழுவும் ஊர்கள்
சூழவுள்ள சுதந்திர தேசம்
சொல்லிச் சொல்லி மகிழு தமிழா!

ஓட்டை மாவடி ஊர்தனில் வாழும்
உடன் பிறப் பெங்கள் முஸ்லிம் மக்கள்
வீட்டினில் தமிழே விருந் தென இனிக்கும்
வெட்டை வெளிகள், விளை நில மெல்லாம்
நாட்டுப் பாடல் நட மிட வைப்பார்
நற்றமிழ்த் தாயை நலமுடன் காப்பார்
கூட்டு வாழ்வில் தமிழினத் தோடு
குளிர்ந்த நிலாவும் வானுமாவார்!

கற்குடாக் கோர் காவல் அரணும்
கதிர் வெளிக் கிராமம்! கால மெல்லாம்
நெற் கதிர் ஆடும் நிலம் பாற் சேனை
நினைத்தால் ஒன்றைச் செய்யும் தீரர்!
முற்றிப் போன தமிழின் பக்தர்
முகத்தில் தமிழே முறுவல் செய்யும்
சிற்றூர் வம்மி வட்ட வான்
செருக்களமாகும் மாங்கேணி!

(வளரும்)

**கவிஞர் வாகரைவாணன்**

## அரசாங்கத்தை ஆதரியாதோர்! அனாதைகளே!

நாங்கள் எப்போதும் அரசாங்கத்தில் இருந்தே ஆக வேண்டும் இல்லாவிட்டால் முன்னேற்றம் எதுவுமில்லாமல் வேடர்கள் போலவே வாழ வேண்டி ஏற்படும். (தினகரன் *23 - 1 - 1981*)

இப்படி - முதலாளித்துவ யு. என். பி. அரசாங்கத்தின் உள்நாட்டு மந்திரியாகவிருக்கும் தேவநாயகம் அண்மையில் வந்தாறுமூலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் எதிர்க்கட்சிக் காரர்களை எச்சரித்திருக்கிறார்.

எல்லா மக்களையும் சமனாக நடத்துகிறோம், என்று சொல்லும் அரசாங்கத்தின் அமைச்சரின் வாயிலிருந்து வந்த மேற்படி வார்த்தைகள் யு. என்.பி ஆட்சியைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பவர்கள்மட்டுமே வாழ முடியும், மற்றவர்களெல்லாம் தூக்குக் கயிற்றில் தான் தொங்க வேண்டி யேற்படும் என்று சொல்லாமல் சொல்வது போலல்லவா இருக்கின்றது?

*

## தமிழீழப் போரில் தமிழகம் குதிக்கும் எம்.ஜி.ஆர் உறுதி!

இலங்கையில் உள்ள தமிழர்களின் போராட்டத்திற்கு தமிழர்களின் ஆதரவு வேண்டுமென்கின்றனர். இலங்கைத் தமிழர்கள் போராடுவதற்கு எங்களது யோசனையைக் கேட்டால் அவர்களது போராட்டத்தில் தமிழ்நாட்டைச்சேர்ந்தவர்களும் குதிப்பதற்குத் தயார்!

இப்படி - மதுரைமாநாட்டு தொல்காப்பியர் அரங்கில் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர் பேசும்போது தமிழீழ மக்களுக்கு உறுதியளித்தார்.

# ஆணிவேரையே கல்லினால் மரம் ஆட்டம் காணும்!

## உலகத் தமிழ் மாநாடுபற்றி கலாநிதி சாலை இளந்திரையன்

கலாநிதி சாலை இளந்திரையன் அவர்களும், கலாநிதி சாலினி இளந்திரையனும் உள்ளதை உள்ளபடி பேசுவதற்கும் எழுதுவதற்கும் வேண்டிய துணிவும் துடிப்பும் உடையவர்கள். இவர்கள் ஈழத் தமிழர்களுக்கும் நன்கு அறிமுகமானவர்கள்'

சாலை இளந்திரையன் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிட்ட அறிக்கையினையே இங்கே தருகிறோம். மதுரைமாநாட்டுத்'தொல்காப்பியர்'அரங்கில் இந்த அறிக்கையினைத் தழுவி அவர் ஆற்றிய உரைஅறிஞர் பலருடைய பாராட்டையும் பெற்றது.

முதலாவது உலகத் தமிழ் மாநாடு, மலேசிய நாட்டின் தலைநகரான கோலாலம்பூரில் 1966 ஏப்பரல் மாதம் நடைபெற்றது. இரண்டாவது மாநாடு சென்னையில் 1968 சனவரியிலும், முன்றாவது மாநாடு பாரிசில் 1971 சூலையிலும் நாலாவது மாநாடு ஈழத் தமிழகத்தின் தலைநகராக விளங்கும் யாழ்ப்பாணத்தில் 1974 ஜனவரியிலும் நடைபெற்றன. இப்போது, 1981 ஜனவரி முதல் 10 வரைஐந்தாவது மாநாடு மதுரை மாநகரில் நடைபெறுகிறது.

தமிழ்மொழி, தமிழிலக்கண இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழ் பண்பாடு என்பவைகளைப் பற்றித் தமிழர்கள் மட்டுமே ஆராய்ச்சி செய்து வந்த நிலைமை மாறி, உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும் ஆராய முனைந்த வரலாறுதான் இந்த மாநாடுகளின் வரலாறு. தமிழின்பால் இத்தகையதொரு உலகக் கவர்ச்சிக்குத் தடம் அமைத்த இயக்கமே, 1964 ல் டில்லி மாநகரில் (கீழைத் தேயங்களில் ஆய்வாளர்களின் 26 ஆவது மாநாட்டில்) உருவான உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம்.

இந்தக் கழகத்தை உருவாக்கியவர்களையும், அதன் மூலம் தமிழ் ஆய்வின் பரந்த வளர்ச்சிக்குத் தடம் அமைத்தவர்களையும் உலகத் தமிழ் மாநாடு நடத்துவோர் நினைவிலே கொள்ள வேண்டும். இந்த அறிஞர்களை மறப்பது, தமிழ் வரலாற்றில் ஏற்பட்ட ஒரு பெரிய வளர்ச்சியை மறந்துவிடுகிற வரலாற்றுக் குற்றமும் அந்தத் தவறான நடையையே நல்ல நடையாகக் கொண்டுவிடும் ஒருவிதமான பிழைபாடும் ஆகும். இத்தகைய குற்றங்களும் பிழைகளும் புகுதலால், உ. த. ஆ. கழகத்தின் உயரிய நோக்கமே முடங்கிப் போகும் என்பதையும் நாம் உணர வேண்டும்.

தமிழ் ஆய்வுக்கு ஓர் உலகளாவியதளத்தை அமைத்திட வேண்டும் என்ற பேரார்வத்தோடு1964 இல் முயன்றவர்கள் மிகமிகச் சிலரே; அந்தச் சிலரே, தமிழ் ஆராய்ச்சியின் இந்த உயர்வரலாற்றில் மறக்க முடியாத இடத்துக்கு உரியவர்கள்: ஈழநாட்டைச் சேர்ந்த அறிஞர் கா. பொ. இரத்தினம் அவர்களின் எண்ணத்திலேதான் ''உலகத் தமிழ் ஆராய்ச்சி கழகம்'' முதன்முதலில் உருவாயிற்று. மேலே குறித்த, கீழைத்தேசக் கலை ஆய்வாளர் மாநாட்டில் பங்கு கொள்வதற்காகத் டில்லிக்குவந்து, சாலை---சாலினியோடு அவர்கள் இலத்தில் தங்கி இருந்த கா. பொ. இரத்தினம் அவர்கள் சாலையரிடம் முதன்முதலில் இந்த எண்ணத்தை வெளியிட்டார்; அவர்கள் இருவரும், அதனை விரும்பி ஏற்று, அதற்கான பணிகளில் ஈடுபட முன்வந்தார்கள். மூவரும் சென்று, அந்த மாட்டுக்கு வந்திருந்த தமிழக அறிஞர்களையும் பிற நாட்டு அறிஞர்களையும் சந்தித்தார்கள். தனிநாயக அடிகளார் இதிலே தனித்த ஆர்வம் காட்டினார். இந்த நால்வரின் பேரார்வத்தாலும், ஏனையோரின் ஒத்துழைப்பாலுமே உலகத் தமிழ் ஆராய்ச்

(8ம் பக்கம் பார்க்க)

# உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவன் காஞ்சி தந்த கரிபால்டி பேரறிஞர் அண்ணா!

காலம் கொடூரமானது! எவ்வளவுபயங்கரமானது! அது எங்கள் பத்ரை மாற்றுத் தங்கத்தைப் பறித்துவிட்டது. மாசி மூன்றுடன் பன்னிரண்டு ஆண்டுகளைப் புரட்டிவிட்டது. கடலின் அடியில் சிப்பிகளோ ஏராளம். அவற்றுள் ஒரு சிலவே முத்துக்களாகப் பரிணமிப்பவை. காலமும் அப்படித்தான் - அவ்வப்போது சில நன்முத்துக்களை உதிர்க்கின்றது. அந்நன்முத்தில் ஒருவரே எங்கள் வீணைமுரளும் மோனைப் பேச்சாளர் அண்ணா ஆவார்.

1909 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ம் நாள் மலர்ந்தார் ''வளரும் பயிரை முளையிலே தெரியும்'' என்பதற்கேற்ப வளர்ந்தார். அரசியலில்புகுந்து ஒளிர்ந்தார். அமெரிக்காவில் பிரகாசித்த ஆபிரகாம் லிங்கனுக்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின் தோன்றினார். லிங்கனைப் போலவே அரசியல் வரலாற்றில் தனக்கென்றொரு முத்திரையைப் பொறித்தார். அத்தோடு மட்டுமல்லாமல் கல்வி அறிவு, ஆடம்பரமற்ற வாழ்க்கை, பொறுமை அரசியல் கொள்கைகள் ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட இனத்துக்காகக் குரல் கொடுக்கும் தன்மை என்பன இருவரிடையேயும் காணப்படும் பொருந்தும் தன்மைகளாகும். ''வோட்டு முறையேசரியான முறை என்ற லிங்கனின் வழியைப் பின்பற்றி மேடைகளில் முழங்கியவர், ''மக்களுக்காக மக்களால் ஆன மக்களின் ஆட்சி'' என்ற லிங்கனின் இலட்சியவரிகள் எனக்குப் பாடம் என்று கூறி அதன்படி நடந்த பெருந்தகையாளர்.

அந்நியரின் ஆட்சியினால் அழிக்கப்பட்டு ஆங்கிலமொழியினால் கவரப்பட்டு மக்கள் அல்லல்பட்ட வேளையில் தோன்றியிருந்த நல்லைநகர் நாடு புகழ் நாவலனைப் போல் இந்தி திணிக்கப்பட்டு மக்கள் அல்லல்பட்டபோது - காஞ்சி தந்த கரிபால்டி - எங்கள் தென்னாட்டுக் காந்தி அண்ணா கைகொடுத்து உதவினார். பிரசங்கமாரி நாவலரின் காலத்தில் தோன்றிய சொல். மேடைகளில் பொழிந்து அதனை முறையாகக் கையாண்ட பெருமை அண்ணாவையே சாரும். இதனால் ''மேடைக்கு அண்ணா'' என்ற பட்டப்பெயரையும் பெற்றார்.

தோற்றத்தில் எளிமை, செயலில் மனிதத்தன்மை, வெற்றியில் வெறியின்மை, என்ற பிஸ்மார்க்கின் மூன்று மணிமொழிகளுடன் மூன்றெழுத்துள்ள அண்ணா - இடமாறி தோற்ற வழுவின்றி எவ்வளவு தூரம் பொருந்துகின்றார் என்பதைப் பாருங்கள்!

1934 ம் ஆண்டு எம். ஏ பட்டப்படிப்பை முடித்த அண்ணாவுக்கு அரசியலில் நுழைவதற்குக் களம் அமைத்துக் கொடுத்த கட்சி நீதிக்கட்சியாகும். அரசியல் பூங்காவில் அவர் மணப்பதற்குக் காரணமாயிருந்த வளர்த்த சிற்றன்னை, நீதிக்கட்சியைச் சேர்ந்த பாகுதேவ், பெரியார் ஈ. வெ. ரா. என்பவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

சொல்லில் ஒன்றும் செயலில் இன்னொன்றுமாக நடந்து கொண்டிருந்த காங்கிரஸ்கட்சியை 1925 ல் ஈ. வெ. ரா பெரியார் கைகழுவினார். 1926 ல் தன்மான இயக்கத்தை நடத்தி நீதிக்கட்சியில் சேர்ந்தார். 1935 லேதான் பெரியாரும் அண்ணாவும் சந்தித்தார்கள். இவர்கள் சந்திப்பை சாக்கிரட்டீஸ் - பிளேட்டோ சந்திப்பென்று அழகாக வருணிக்கிறார்கள். காலப்போக்கில் நீதிக்கட்சி பெரியாரைத் தலைவராக கொண்டது. வெள்ளை வேட்டிக்காரருக்கும் - பட்டுப் பீதாம்பரங்களுக்கும், காரை விட்டு இறங்காதவர்களுக்கும், கிராமப்புற வாடை வீசாதவர்களுக்கும் படிப்பறிவில்லா பெரியார் தலைவராக இருப்பது பிடிக்கவில்லை. இதற்கு அண்ணா கொடுத்த விளக்கத்தைப் பாருங்கள். தலைவர் படிப்பறிவில்லாதவராக இருக்கலாம். ஆனால் அவரைப் போல் சிந்தித்துச் செயலாற்றுவதற்கு இக்கட்சியில் வேறு ஒருவராலும் முடியாது என்பதேயாகும். இதன்பின் கட்சிக்குள் பூசலும் - பிளவும் ஏற்பட்டு நீதிக்கட்சி, திராவிடர் கழகமாக இருவராலும் புனரமைப்புச் செய்யப்பட்டது. திராவிடர் கழகத்தை மூலை முடுக்கு - பட்டிதொட்டி எங்கும் பரப்பிய பெருமை இருவரையுமே சாரும்.

இந்தி எதிர்ப்பின் காரணமாக அண்ணா மூன்றுமுறை சிறைவாசம் செய்தார். அண்ணாவின் பேச்சு கேட்போரைச்

### பெப்ரவரி 3 பேரறிஞர் அண்ணா நினைவுநாள்

சுண்டியிழுக்கும் தன்மை கொண்டது. துள்ளிவரும் அடுக்குச் சொற்றொடரில் - ஆற்றின் சலசலப்பு - தென்றலின் குளுகுளுப்பு - குயிலின்இனிமை, யாழின் சுருதி, தேனின் இனிமை, மலரின் நறுமணம் என்பவை அடங்கியிருக்கும். ஆங்கிலத்திலும், தமிழிலும், வடமொழியிலும் சரளமாகப் பொன்மொழிகளைக்காட்டியும் உவமான உவமேயம் காட்டியும் பேசும் வல்லமை படைத்தவர் அண்ணா.

நீராவி யந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார்? தெரியாது. யமனுக்கு வாகனம் என்றதும் எருமைக் கடா என்பார்களாம். இல்வாறே மூடநம்பிக்கையை அண்ணா சாடினார். இம்படியான பேச்சுக்களை ரசித்துச் சுவைத்த கல்கியால் ''பெர்னாட்ஷா'' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

பெரியார் மாணவர் நலனில் அக்கறை கொள்ளாததாலும், திராவிடர் எந்நேரமும் கருஞ்சட்டை அணியவேண்டுமென்ற கொள்கையாலும்,

> ''புதியதோர் உலகம்
> செய்வோம் - கெட்ட
> போரிடும் உலகத்தை
> வேரொடு சாய்ப்போம்''

என்று உணர்ச்சி பொங்கப் பாடிய பாரதிதாசனுக்கு அண்ணா பொற்கிளி வழங்கியதாலும், கலப்புமணம்-விதவைகளுக்கு மறுமணம் என்று முழங்கிவிட்டு உலகமேவெறுக்கத்தக்கவகையில் இளமணம் - புரட்சிமணம் பெரியார்செய்ததாலும் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் மனமுறிவுஏற்பட்டு 1949-ல் அண்ணாவால் திராவிட முன்னேற்றக்கழகம் உருவாக்கப்பட்டது.

அறிஞர் ரா. பி. சேதுப்பிள்ளை உடன் ஏற்பட்ட கம்பராமாயண சொற்போரில்,

> ''மனத்தினால் வாக்கினால்
> மறுவுற்றேனெனில்
> சினத்தினால் சுடுகநீ செந்தீச்
> செல்வா என்றான்''

என்ற கம்பரின் கவியைக் காட்டி ''உடலினுள் மறுவுற்றனளோ'' என்ற ஐயுறவை ஏற்படுத்தி நடுவர்களுக்கு நகைச்சுவையை வரவழைத்து வாதிட்டார். நான் தெருவோரத்து மனிதர்களின் பிரதிநிதி' என்று அண்ணா நாடாளுமன்ற மேலவையில் கூறிய சொற்கள் கல்மனத்தையும் இளக வைக்கும் தன்மை படைத்தன.

ஒருமுறை காங்கிரஸ் கட்சிக்காரர் தி. மு. க. வினரைப் பார்த்து செக்குமாடுகள் என்றனராம். அதற்கு அண்ணா ஆம் நாங்கள் ''செக்குமாடுகள்'' தான். செக்குமாடுகள் பாதை தவறுது - இலட்சியம் தவறுது, எள் எண்ணெயாகும் வரையில் வலம்வரும். ஆனால் நீங்கள் கோயில் மாடுகள். கோயிலில் கிடைப்பவற்றைத் தின்றுவிட்டுக் கோயிலையும் அசுத்தப்படுத்தி வருபவர்களையும் மிரட்டும் அந்தக் கோயில் மாடுகள்தான் நீங்கள் என்ற அரிய விளக்கங்களைக் கையாண்டு சிம்மாசனம் ஏறிய செம்மல்,

மனைவியிடம் எவ்வளவு ஆசையாயிருக்கிறேன் என்று எழுதிவிட்டு 6, 7 மாதங்கள் வெளியில் இருந்தாலும் கணவன். அப்படி அரசியலில் இராதீர்கள் என்ற அண்ணாவின் சொல்லுக்குத் தோள் கொடுத்த தம்பிகளால்-கழகம் கட்டியெழுப்பப்பட்டு வீறு நடைபோட்டு - நான்காவது பொதுத்தேர்தலில் அனைத்துக் கட்சிகளும் வியக்கும்வகையில் வெற்றிவாகைசூடி 1967-3-6 இல் முதலமைச்சரானார்.

முதலமைச்சரானதும் ''ஒரு ரூபாக்கு ஒருபடி அரிசி'' என்ற திட்டத்தை அமுல்படுத்தி - உணவு நெருக்கடியை நீக்கிப் பஞ்சத்தைப் போக்கிய பண்பாளர்.

அண்ணாநடத்தியமும்முனைப் போராட்டத்தின் ஒரு குழுவுக்கு அப்போது கலைஞர்

ந. கணேசலிங்கம்
பி. எஸ். சி

கருணாநிதி அவர்கள் தலைமை வகித்தார். அண்ணா வளர்த்த தி. மு. க. விலிருந்து சம்பத் 'தமிழ் தேசியக் கட்சி'யைப் பிரகடனப்படுத்தி வலுவிழந்தார். அவர் இறந்ததும் தி. மு. க. விலிருந்து எம். ஜி. ஆர். விலகி அ. தி. மு. க. வைப் பிரகடனப்படுத்தி வலுப்பெற்றிருக்கிறார். அண்ணா ஆராய்ச்சிக்குரிய டாக்டர் பட்டத்தைப் பெறும்போது புற்றுநோயால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் இறுதியாக 1969-ல் பொங்கல் விழாவன்று நடந்த கலைவாணர் சிறப்பு விழாவில் பங்குபற்றினார்.

இராஜாஜி கொண்டுவந்த குலத்தொழில் கல்வியை எதிர்த்துப் போராடிய புண்ணியவான். ''திருடன் மகன் திருடுவதா'' என்ற கோஷம் எழுப்பியவர். இறுதியாக 1969-ம் ஆண்டு மாசி மாதம் 12,20க்கு அணையா ஜோதியானார். கட்சியின் தளபதி இலக்கியத்தின் புத்தொளி எங்கள் உள்ளங்களையெல்லாம் கொள்ளைகொண்ட கள்வனாகி விட்டார்.

# 'சோதிடர்' சிறில் மத்தியூ சொல்வது பலிக்காது!

சிறில் மத்தியூ என்னும் சிறிலங்கா அரசின் மாண்புமிகு ஆருடக்காரரொருவர் யாழின் பல பாகங்களுக்கு வருகை தருவது தமிழீழ மக்களுக்கு கிடைத்த மாபெரும் பெருமையாகும்.

ஏனென்றால் தமிழீழத்தை வேண்டாம் என்னும் ஒரு தமிழன்கூட சிறில் மத்தியூவின் அரசியல் ஆருடத்தைக் கேட்டால் ''தமிழ் ஈழம் தான் வேண்டும்'' என்று மார்தட்டிக் கூறுவான்.

இவர் சொல்லும் ஆருடங்கள் அவருடைய நாட்டில் பலிக்காவிட்டாலும் தமிழீழ நாட்டில் பலிக்கும் என்ற நம்பிக்கை நம்மவர்சிலருக்குண்டு.

ஏனென்றால் அவருடைய நாவில் இருந்து ஆருடங்கள் பிறந்த பொழுதே சிறிலங்கா அரசின் பட்டாளம் ஏற்கனவே செயலாற்றிய செயற்கரிய செயல்களை எந்த தமிழனும் என்றும் மறக்கமாட்டான்.

யாழின் இளம் தோழர்கள் எழுவரை மீளாத உறக்கத்திற்கு ஆளாக அனுப்பியதை மறக்கின்ற அளவிற்கா மறத்தமிழன் இருக்கின்றான். தமிழ்த்தலைவர் மனைவியை தாறுமாறாக பேசியதன் மூலம் தமிழச்சிகளின் எதிர்காலத்தை சிந்திக்க வைத்த பெருமையும் சிறில் மத்தியூ என்னும் சிறப்பான ஆருடக்காரருக்கு உண்டல்லவா.

இரா. பன்னீர்ச்செல்வம்

''பரந்தன் இராசாயன தொழிற்சாலை மாறும்'' என்ற மாபெரும் உண்மையை மிகச் சாதாரணமாக சொல்லுகின்ற மனப்பாங்கு சிறில் மத்தியூவைவிட வேறுயாருக்கும் இருக்காது ஆனால், பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் வேலைசெய்யும் சில பச்சோந்திகளுக்கு இன்னும் புரியாதது சிறில் மத்தியூவின் குற்றம் அல்லவே.

கடந்த 17 ம் திகதி சனிக்கிழமை நல்ல நேரத்தில் சோதிடரின் சோதிட வியாக்கியானம் ஆரம்பமானது. அந்த இடத்தில் சோதிட வாலாயச் சின்னங்களாக இயந்திரத் துப்பாக்கிகள், சிறிலங்கா அரசின் பொலிஸ்படைகள் ஆகியன இருந்தன.

ஏற்கனவே சிறிய சிறிய எதிர்காலங்கள் கூறப்பட்டு; அதனால் சிறிலங்கா அரசிடம் இருந்து சிமெந்துக் கோட்டா, பீடிக்கோட்டா, இரண்டு மூன்று பேருந்து நடத்துனர் பதவிகள் போன்றவற்றைப் பெற்றுக் கொண்ட பொழுதிலும்; அச்சத்தின் காரணமாக மகிழ்ச்சியடையாத சில சடப்பொருள்களின் கரங்களில் பச்சை மாலைகள் சிலது இருந்ததா இல்லையா என்பதை விட சோதிடர் சொற்பொழிவை கேட்பதுதான் புத்திசாலித்தனம்.

''தனிநாட்டுக் கோரிக்கையால் எதையும் சாதிக்க முடியாது'' என்ற பேருண்மையை மிகப்பொருத்தமான இடத்தில் தனக்கே உரித்தான ஆரு

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் பேசுகிறார்

# பொத்துவில் மண்ணில் புதுக்களம் அமைப்போம்!

இயக்கம் ஒரு கோயில் --- அதன் அத்திவாரமாய் இருப்பவர்கள் பொதுமக்களே!

கோயிலுக்கழகும் -- பெருமையும் தரும் கோபுரமாகத் திகழ்பவர்கள்தான் தலைவர்கள்!

பார்ப்பவர் கண்ணில் கோபுரமே முதல் படுவது போல -- இயக்கத்தை எண்ணிடும் போது அதன் தலைவர்களே நமக்குத் தெரிகின்றார்கள்.

இதனால் -- இயக்கத்தில் எது நடந்தாலும் தலைவர்களுக்கே அவை அர்ப்பணமாகின்றன.

வாழ்த்தும் -- வசையும் அவர்கள் மீதே வாரி இறைக்கப்படுகின்றன--

**அழகான கோபுரத்தின் மீது அமர்ந்து பறவைகள் அதனை தங்கள் எச்சத்தால் அபிஷேகம் செய்வது போல-- எதிர்க்கட்சியினரின் ஏச்சு பேச்சு ஏகடியங்களுக்கு இரையாகுபவர்கள் தலைவர்களே!**

இப்படி சொல்வதின்மூலம் - இயக்கத்தலைவர்கள்என்போர் எங்கோ இருந்து வந்து ஆலயத்துக் கோபுரமாக காட்சி அளிப்பவர்கள் அல்ல!

அவர்கள்-- தொண்டர்களில் ஒருவராக இருந்து இயக்கப்பணிகள் எல்லாவற்றுக்கும் தோள் கொடுத்து -- தொடர்ந்து பாடுபட்டு தமது உழைப்பால்-- ஆற்றலால் தலைமைப் பதவி என்னும் கிரீடத்தை தாங்கிக் கொண்டிருப்பவர்கள் இதை இன்னொருவகையில் சொன்னால் -- பூமிக்கடியிலிருந்து கண்டெடுக்கப்பட்டு பட்டை தீட்டப்பட்ட வைரங்கள் -- பூரண ஒளி பெற்று ஜொலிக்கின்றன!

**கரடு முரடாகக் கிடந்த கற்கள் கண்ணைப்பறிக்கின்றன வென்றால்-- அதற்கான காரணம் அவற்றுக்குள்ள அபரிதமான மதிப்பு--அந்தஸ்து!**

குப்பையிலே கிடந்தாலும் குண்டுமணிமின்னுவதற்கும் இதுதான் காரணம்!

தந்தை செல்வா கண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு மாபெரும் மக்கள் இயக்கம் ஈழம்வாழ் 35 லட்சம் தமிழ்ப் பேசும் மக்களின் சுதந்திரம் ஒன்றையே இலக்காக வைத்து சோர்வின்றி உழைத்து வரும் பாசறை -- பாடி வீடு!

இதைப் புரிந்துகொள்ளாதவர்கள் -

அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கு ஆயத்தம் செய்யவே - தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கிராம யாத்திரையைத் தொடங்கியிருக்கின்றார்கள் என்று கிண்டல்பண்ணுகிறார்கள்.

இயக்கம் அழிந்துவிட்டது - எந்த அமைப்பு வேலையும் இதுவரை நடைபெறவில்லை என்று வீதிக்கு வீதிநின்று விமர்சனம் செய்தவர்கள்-

இயக்க அமைப்புவேலை ஒன்றையே இலக்காகக் கொண்டு நடைபெறவிருக்கும் கிராம யாத்திரையை இப்போது நையாண்டிபண்ணத் தலைப்பட்டுவிட்டார்கள்.

இந்தமனிதர்களைப் பொறுத்தவரையில் இயக்கத்தலைமை எதைச் செய்தாலும் அதில் எள்ளளவாவது குறைகண்டு பிடித்தே தீரவேண்டுமென்ற எண்ணத்தோடிருப்பவர்கள்!

எனவே - முட்டையிலே மயிர்பிடுங்க முனைபவர்களை முற்றாக நாம் நிராகரித்துவிட்டு நாம் நமது பணியில் முன்னேறுவோம்!

கிராமயாத்திரை நிச்சயமாக மக்கள் மனத்தில் ஒருவித கிளர்ச்சியை - புதுத்தென்பை உருவாக்கத்தான் போகின்றது.

மக்களும் தலைவர்களும் மனம்விட்டுப் பேசி விடுதலை இயக்கத்தை விரைந்து நடத்திட பல்வேறு கருத்துக்களை - திட்டங்களைப் பரிமாறிக் கொள்ளப் போகின்றார்கள்.

குடும்பபாசம் அங்கே குதூகலிக்கும் - அண்ணன் - தம்பி - அக்கா - தங்கை உறவுகள் மீண்டும் புஸ்பிக்கும்.

**இயக்கம் என்னும் குடும்பம் - இலட்சியப் பற்று ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்ளுதல் - பாசம் என்னும் இழைகளாலே பிணைக்கப்படுகின்றன!**

இந்த உண்மை - நிரூபிக்கப்படும் களமாகவே கிராமயாத்திரை அமையவிருக்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு தலைசிறந்த ஜனநாயக அமைப்பு! இயக்கத்தை நடத்திச் செல்லும் தலைவன் - எடுத்தேன் கவிழ்த்தேன் என்றில்லாமல், பொதுமக்களின் அபிலாஷைக்குப் பொருத்தமாகவே நடந்து கொள்கின்றான் என்னும் நம்பிக்கை இன்னும் அதிகமாகவே இங்கே உரம் பெற்றுவிடும்.

தன்னைமட்டுமல்ல தன்குடும்பத்தையே தமிழினத்தின் விடிவுக்காக அழித்துக் கொண்டிருக்கும் ஒருவன் தங்களுக்குத் தலைவனாகக் கிடைத்திருக்கின்றான் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்மக்கள் பாதயாத்திரையின் போது பொங்கிப் பூரிக்கவே செய்வர்!

மொத்தத்தில் - பாதயாத்திரை - தமிழ்ப் பேசும் மக்களின் உள்ளங்களை மூடியிருக்கும் சோர்வு - தெளிவின்மை - சந்தேகம்என்னும் முகில் படலத்தை ஊடறுத்துச் செல்லும் உதயசூரியனாகவே திகழும்! இதன் அடையாளமாகவே.

**தென் தமிழ் ஈழத்தை நோக்கி மக்கள் கடல் திரள்கிறது - விடுதலை முரசம் வெடித்துக் கிளம்புகிறது!**

புதியதோர் வரலாறு படைக்கப்போகும் கிராமயாத்திரையில் தமிழினம் முழுவதும் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டுமென்று நாமும் அழைக்கின்றோம்!

# இனவிரோதி மத்தியூவுக்கு இங்கென்ன வேலை?

## இப்படிக் கேட்கிறார் தன்மானப் பெண் ஜெயவாணி!

அண்மையில் தமிழ் ஈழத்தை நோக்கி அமைச்சர்களின் படையெடுப்பு அதிகரித்து வருகின்றது. இவர்கள் ஈழத்தை நோக்கி வரும்போது அவர்களது அடி வருடிகள் புடைசூழ துப்பாக்கி ஏந்திய அரச ஊழியர் காவல் புரிய தமது பயணத்தை முடித்து திரும்புகின்றனர். தமிழ் மக்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதை உணராமல் அவர்கள் மத்தியிலே அந்த அமைச்சர்கள் தமது புளுகு மூட்டையை அவிழ்த்து வருகின்றனர். தமிழ் மக்களுக்காக அரசாங்கம் எவ்வளவோ கோடி ரூபாய் செலவு செய்ய இருக்கின்றதாம். தாம் எல்லா மக்களையும் இன மத பேதமின்றி சரிசமமாக நடாத்துகின்றனராம். தமது அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்கும் சலுகைகள் போல் எந்த ஒரு அரசாங்கமும் செய்ததே இல்லையாம் இன்னும் எத்தனையோ புளுகுகள்! பாவம் அமைச்சர்கள்!

தமிழ் மக்களின் விவேகம் இவர்களுக்கு எங்கே தெரியப் போகின்றது. சென்ற வாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தாரே ஒரு அமைச்சர் அவர்தான் எமது மதிப்புக்குரிய விஞ்ஞான கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. சிறில் மத்தியூ, இந்த அமைச்சரும் இதே பல்லவியைத்தான் பாடிவிட்டு சென்றார். இந்த அமைச்சர் யார்? எப்படிப்பட்டவர் என்பதை ஈழம்வாழ் தமிழன் ஒவ்வொருவனும் நன்கறிந்திருக்கின்றான். இந்த அமைச்சர் பாராளுமன்றத்தில் எமது தமிழ்த் தலைவர்களை எப்படி அவதூறாகப் பேசினார் என்பதும் ஸ்ரீலங்காவில் நடைபெறும் பொதுக்கூட்டங்களிலும் தமிழ் மக்களை எப்படி இழிவாக கூறிவருகிறார் என்பதையும் நாம் அறிவோம். இவரது போலி அன்பும் பண்பும் எமக்குத் தேவை இல்லை.

இவர் நினைப்பது போல் தமிழ் மக்கள் அப்படி ஒன்றும் முட்டாள்கள் அல்ல. தமிழர்கள் பிரச்சனைகளை இந்த அரசாங்கம் தீர்க்கிறது என்று ஓலமிடும் இவர் எப்படித்தான் கதறித் துடித்தாலும் நாம் அதை ஏற்கத்தயாராக இல்லை. எமக்கென்று ஒரு நாடு இல்லை யென்றாலும் எமக்கென்று பொறுப்புணர்ச்சி உள்ள தலைவர்கள் இருக்கின்றார்கள் அண்ணன் காசிஆனந்தன் கூறுவதுபோல் தலைமைப் பறவையின் பின் ஒழுங்காக சுதந்திரத் தமிழீழத்தை நோக்கிப் பறந்து கொண்டிருக்கும் எம்மை சிறில் மத்தியூ போன்றவர்களின் பேச்சுக்களோ அல்லது வேறெந்த நாச சக்திகளோ திசை திருப்பிவிட முடியாது.

## பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு

தென்னாபிரிக்கா அரசாங்கம் இரண்டு பத்திரிகைகளுக்கு சீல் வைத்துள்ளது. மூன்று வருடத்துள் இரண்டாவது தடவையாக இப்பத்திரிகைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. மூன்று கறுப்பு இன பத்திரிகையாளரின் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கறுப்பு இன பத்திரிகையாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர் இதனைத் தொடர்ந்தே அரசு நடவடிக்கையை மேற் கொண்டுள்ளது.

## அடையாள அட்டையில்லாது அவதி!

ஒருமாதகால எல்லைக்குள் அடையாள அட்டைகளைப் பெற்றுத்தரமுடியும் என்று அரசாங்கம் அடிக்கடி பத்திரிகைகள் மூலம் பெரிதாக விளம்பரப்படுத்துகின்றது.

ஆனால் கல்குடாத் தொகுதியில் வாழைச்சேனைத் தமிழ்ப் பிரிவில், இப்பகுதி கிராம சேவக உத்தியோகத்தரிடம் 1.5.80ம் திகதி தொடக்கம் 31-5-80ம் திகதி வரையிலும் கொடுத்த தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களுக்கு இதுவரையும் எந்தவிதமான முடிவும் இல்லை.

ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் மேற்படி தேசிய அடையாள அட்டைகளில்லாது இளைஞர்களும் யுவதிகளும் மிகவும் அல்லலுறுகின்றார்கள்.

ஒருவேளை தங்கள் விண்ணப்பங்கள் கழிவுக் கடதாசிகளுடன் சேர்ந்து காகித ஆலைக்குப் போயிருக்கலாமெனவும் கவலைப்படுகின்றார்கள்.

*

## பணயக் கைதிகள் விடுதலை!

கடந்த ஓராண்டுக்குமேலாக ஈரானில் வைக்கப்பட்டிருந்த பணயக் கைதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு விடுதலை செய்யப்பட்டனர்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக றொனல்ட் றீகன் பதவியேற்பதற்கு சிலநிமிடங்களுக்கு முன் 'அல்ஜீ' ரியாவுக்குச் சொந்தமான விமானத்தில் இவர்கள் பயணமானார்கள்.

# விடுதலை முரசம் கொட்டும் வீர மக்கள் சார்பில் பேசுகின்றேன்!

## மதுரை மாநாட்டில் மக்கள்தலைவர் அமிர்

❀ தைத்திங்கள் 4-ம் நாள் மதுரையில் ஆரம்பமான தமிழாராய்ச்சி மாநாட்டில் தலைவர் அமிர் அவர்கள் ஆற்றிய உரை முழுவதும் இங்கே இடம் பெறுகின்றது.

உங்கள் மத்தியில் சற்றும் எதிர்பாராத விதமாக திடீரென்று தமிழக அறநிலை அமைச்சர் அவர்களால் சில வார்த்தைகள் கூறுமாறு அழைக்கப்பட்டிருக்கின்றேன். இலங்கையில் தமிழ் மக்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உரிமையோடு வாழ்ந்த மக்கள். அந்த உரிமையை மீண்டும் நிலை நாட்டுவதற்காக, இலங்கையில் தமிழ் மக்கள் இழந்த அந்த உரிமையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை தமிழ் மொழியின் உரிமையை நாம் மீண்டும் நிலைநாட்டித்தீர வேண்டும் என்பதற்காக உலகின் முன்னிலையிலே உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு ஒரு சுதந்திர தாயகத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக உழைத்துக் கொண்டிருக்கின்ற தமிழர் விடுதக் கூட்டணியின் சார்பில், இலங்கைச் சட்ட மன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவன் என்ற வகையிலே சில வார்த்தைகள் பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்காகநான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். பெருமைப் படுகின்றேன். தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கின்றேன்.

அன்பர்களே! இந்த மாநாடு அரசியல் கலப்பற்ற மாநாடு தமிழின்வாழ்வுக்குவளர்ச்சிக்கு வழிவகுக்கும் மாநாடு. அதன் தொன்மையை, புதைபொருளை ஆராய்ந்து எமது அன்னைக்கு ஆலயம் அமைப்பதற்கு மாத்திரமல்ல அந்த அன்னையையும் வாழவைக்க வளரவைக்களந்தெந்தத்துறையில் நாம் உழைக்க வேண்டுமென திட்டமிட்டு செயலாற்றுவதற்கு, உலகிலே தமிழ் கற்றவர்கள், தமிழை அறிந்தவர்கள் தமிழினுடைய அருமை புரிந்தவர்கள் அத்தனை பேரும் கூடி ஆராய்ந்து நடத்துகின்ற மாநாடு. இந்த மாநாட்டில் ஒரே ஒரு கருத்தை மாத்திரம் நான் கூறி வைக்கவிரும்புகின்றேன்.

இந்த மாநாடு, ஐந்தாவது மாநாடாக இன்று தமிழகத்திலே நடைபெறுகிறது. 4 வது மாநாடு இலங்கையிலே யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இன்று தமிழக அரசு தனது முழு சக்தியையும் அர்ப்பணித்து இந்த மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 74ம் அண்டு நடைபெற்ற 4 வது தமிழாராய்ச்சி மாநாட்டை ஆட்சியின் எதிர்ப்புக்கு மத்தியில், ஆட்சியின் ஒத்துழைப்பின் மறுப்புக்கு மத்தியிலே அங்கு மக்கள் விழாவாக யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக மக்கள் நடத்தி முடித்தார்கள். அந்த விதமான சூழ்நிலையில் மாத்திரமல்ல உலகின் பல்வேறு பாகங்களிலும் கடல் கடந்து எத்தனையோ நாடுகளிலே தமிழ்மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

எனக்கு முன்பு பேசி இலங்கை அமைச்சர் திரு. தொண்டமான் அவர்கள் கூறியது போல எங்குதான் தமிழர்கள் வாழ்ந்தாலும் அவர்கள் தமிழில் பேசும் நிலையை நாம் ஏற்படுத்தவேண்டும். உணர்ச்சி வேகமாகநாம்தமிழர் என்று கூறிக்கொண்டிருந்தால் போதாது. அந்தத் தமிழர்கள் தமிழை அறிந்தவர்களாக, தமிழைசுவைக்கக் கூடியவர்களாக தமிழினுடைய பெருமையை ஏட்டிலே வேற்று மொழியிலே படிப்பவர்களாக இல்லாமல் தம் சொந்த மொழியிலே அதைப் படித்து தமது குழந்தைகளுக்கு அந்தத் தமிழின் சுவையை அளித்து, அன்னையின் பாலோடு தமிழையும் கலந்து ஊட்டக் கூடிய அன்னைமாராக உலகம் முழுவதும் பரந்து பட்டு வாழும் தமிழர்கள் வாழ வழி செய்யப்பட வேண்டும்.

அதற்கு ஒன்று அத்தியாவசியம் தேவை. வளர்ந்து வருகிறது தமிழ். பாரதி சொன்னது போல "புத்தம் புதிய கலைகள், பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும், மெத்த வளருது மேற்கே அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை" என்ற அந்தக் குறையைப் போக்குவதற்காக இன்றைக்கு பல அறிஞர்கள் புதுப்புதுப் தமிழ்ச்சொற்களை ஆக்கிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் அப்படிச் சொற்களை ஆக்கும் பொழுது ஒவ்வொரு நாட்டிலே ஆக்கப்படும் சொற்கள் வெவ்வேறு சொல்லாக அமைத்து விட்டால் ஒவ்வொரு நாட்டிலேயும் பேசப்படும் தமிழ் வேறு தமிழாக நாளடைவில் வளர்ச்சிஅடைந்துவிடும். அந்த நிலை ஏற்படாமல்தடுக்க கூடிய வகையிலே உலகில் எங்கு புதுத் தமிழ்ச் சொல் ஆக்கப்பட்டாலும் அந்தச் சொல்லில் ஒற்றுமையை ஏற்படுத்தி ஒரே தமிழாக, எந்த நாட்டிலே பேசப்பட்டாலும் தமிழ் நாட்டிலே என்றால் என்ன, மலேசியாவிலே என்றால் என்ன, சிங்கப்பூரிலே என்றால் என்ன அல்லது மொரிசியஸ்தீவிலே என்றால் என்ன எந்த நாட்டில் பேசப்பட்டாலும் அந்தத் தமிழ் ஒரே தமிழாக வளர கூடிய வகையிலேபுதுத் தமிழ்ச்சொற்களை ஆக்குவதில் ஒரு ஒற்றுமையை நிலைநாட்டுவதாக இந்தத் தமிழ் அறிஞர்கள் பணிபுரிய வேண்டும் என்பதை தான் இங்கு எடுத்துக் கூறக் கடமைப் பட்டவனாக இருக்கின்றேன்.

ஏனென்றால் ஏற்கனவே சில சில துறைகளிலே சிக்கல்கள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. தமிழகத்திலே நடைமுறையிலிருக்கும் கலைச்சொற்கள் பல இலங்கையிலே நடைமுறையிலிருக்கும் கலைச் சொற்களிலிருந்து வேறாக இருக்கின்ற நிலைஏற்பட்டு வருகின்றது. இருபது மைல் கடலால் பிரிக்கப்பட்ட எங்களுக்கிடையிலேயே இந்த வேற்றுமை என்றால் எத்தனையோ ஆயிரக்கணக்கான மைல்களால் பிரிக்கப் பட்டிருக்கின்ற தமிழ் மக்கள் பேசும் மொழிக்கிடையில் எத்தனை வேற்றுமைகள் வளர்ந்துவிடும். ஆனபடியால் இந்த ஆராய்ச்சி மாநாடு தமிழை உயிருடன் வாழும் மொழியாக, வளரும் மொழியாக என்றுமுள்ள செந்தமிழாக, என்றும் நிலைத்தும் நிற்கும் தமிழாக "சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துவமே என்று சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடியதற்கேற்ப என்றும் ஒரே தமிழாக ஒன்று பட்ட மொழியாக வெறும் உணர்ச்சிகளாலல்ல, ஆக்கபூர்வமான செயலால்தமிழைவாழவைப்போம் என்ற உறுதியோடு இந்த ஆராய்ச்சி மாட்டை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நான் உரையை முடித்துக் கொள்கிறேன்.

# ஆதிக்க புரியின் 'அடையாளம்' வருகிறது! அதற்கு ஏன் வரவேற்பு?

## பிரதமரின் வருகையையொட்டி இளைஞர் பேரவை கேட்கின்றது!

**சிங்கள ஏகாதிபத்தியத்தின் பிரதமரும் ஏனைய அமைச்சர்களும் தைத்திங்கள் 29ம் நாள் தமிழீழத்திற்கு வருகின்றார்கள். தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையையோ, தமிழீழத்தின் சுதந்திரத்தையோ ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்ல, தமிழீழத்தையும் தமிழினத்தையும் அரசியலமைப்பினாலும், இராணுவ படைப்பலத்தினாலும் அடக்கி ஆளும் அதிகாரபீடத்தின் பிரதமரே வருகின்றார்.**

**எனவே ஆளும் வர்க்கத்தின் அதிகார பீடமும், அதன் அடிவருடிகளும் அளிக்கின்ற எந்த வரவேற்பிலோ, விழாக்களிலோ தமிழ்த்தேசிய இனம் பங்கு கொள்ளாமலிருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.**

இவ்வாறு - தமிழ் இளைஞர் பேரவையின் மத்திய செயற்குழு **10-1-81** யாழ்ப்பாணத்தில் எடுத்த தீர்மானத்திற்கமைய அமைப்பாளர் திரு. மாவை சேனாதிராசா அவர்கள் விடுத்த அறிக்கையில் கேட்டுள்ளார்.

அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது:

தமிழீழத்தின் மூலவளங்களையும், தமிழ்த்தேசிய இனத்தின் மூளை வளத்தையும், மனிதசக்தியையும் சுரண்டித் தமிழினத்தை அழிக்கும் முதலாளித்துவ ஆட்சிபீடம் மட்டுமல்ல, தமிழ்த்தேசிய இனத்தின் விவசாயி தொழிலாளி வர்க்கத்தையும் ஏன் பொதுமக்களையுங்கூட வறுமையின் கோட்டிற்கு அப்பால் மரணத்தின் வாயிலுக்கேஇழுத்துச்சென்றுவிட்ட பாஸிஸஆட்சியின் பிரதமர் தான் வருகிறார்.

இந்தப் பாஸிஸ ஆட்சியின் பிரதமரையென்ன எந்தவொரு அமைச்சரையுங் கூடத் தமிழ்த்தேசிய இனம் வரவேற்பதற்கோ, வரவேற்பிற் கலந்து கொள்ளுவதற்கோ இவற்றை அனுமதிப்பதற்கோ எந்தவொரு நியாயமுமில்லை. அப்படி வரவேற்பதும், அதனை ஆதரிப்பதும் அடிமைத்தனத்தையே எடுத்துக்காட்டும்.

எனவே தமிழ்த்தேசியஇனம் தன்னை அடக்கிஆளும் ஆட்சிபீடத்தை எதிர்க்கவேண்டியது கடமை. அந்தஆட்சிபீடத்தின் அமைச்சர்கள் தமிழீழத்தில் தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட வருவதை எதிர்த்தேயாக வேண்டும், தமிழ்த்தேசியஇனத்தின் சுதந்திர தாகத்தை, விடுதலைப் போராட்டத்தை நசுக்கிட எடுத்திடும் எந்தவொரு நடவடிக்கையையும் எதிர்க்க வேண்டும்.

இந்நிலையில்அமைச்சர்களின் ஊர்வலங்களுக்கு கூட்டுறவுத் துறை உட்பட அரச வாகனங்களும் ஊழியர்களும் பயன்படுத்தப்படுவார்கள் என்றசெய்தியும் வெளியாகியிருக்கிறது, அதனையும் விட அரசஉயர்அதிகாரிகள் ஊழியர்களிடமும், பொதுமக்களிடமும் பொருள், பணந் திரட்டி அமைச்சர்களுக்கு வரவேற்பு, விருந்து களியாட்டு விழா வேடிக்கைகள் நடாத்த இரகசியக் கூட்டங்களும் பிறந்திருக்கின்றன. அதிகாரிகளும் அதற்கிணங்க இயங்குகிறார்கள். இவ்வாறு பொதுச்சொத்துக்களும் பொதுமக்கள் சக்தியும் அதிகாரத்தின் பெயரால் பயன்படுத்தப்படுவதை எதிர்க்கின்றோம், வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

## இலங்கைத் தமிழர்களின் சுபாஸ் சந்திரபோஸ்!

தந்தை செல்வாவின் மருமகனும் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியருமான திரு. ஜெயரத்தினம் வில்சன் அவர்கள்-- அண்மையில் எழுதியுள்ள ஒரு நூலில் (இவங்கை அரசியல் அமைப்பு சம்பந்தப்பட்டது) தலைவர் அமிர் அவர்களை இலங்கைத் தமிழர்களின் சுபாஸ் சந்திர போஸ் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச்சபைக் கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டம் மாசி மாதம் (பெப்ரவரி) 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பட்டிருப்பு பா. உ. திரு. பூ. கணேசலிங்கத்தின் மட்டக்களப்பு, தாமரைக்கேணி வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெறும்.

மேற்படி கூட்டத்தில் கிராம யாத்திரை தொடர்பான விடயங்களும் இன்றைய அரசியல் நிலையும் ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்படும்.

தமிழின் சிறப்பு தாரணி முழுவதையும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் இந்நேரத்தில், மேன்மையான தமிழை வளர்த்த மேல்நாட்டு அறிஞர்களைப் பற்றி புலவர் தமிழ்ப்பித்தன் எழுதிய கட்டுரையை நாம் இங்கே வெளியிடுகின்றோம்.

தமிழக அரசு வெளியிடும் தமிழரசு (ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பிதழ்) இதழிலிருந்தே மேற்படி கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது,

-ஆ ர்-

# மேன்மைத் தமிழ் வளர்த்த மேல்நாட்டு அறிஞர்கள்

## வீரமா முனிவர்

இத்தாலி நாட்டில் உள்ள வெனிஸ் நகரில் கண்டல்போ பெஸ்கி - எலிசபெத் பெஸ்கி என்னும்தம்பதியருக்கு 1680ல் மகனாகப் பிறந்தார் கான்ஸ்டென்டைன் ஜோசப்பெஸ்கி, இளமைமுதலே கல்வியில் ஆர்வம் கொண்டு திகழ்ந்த அவர் ஏசுநாதரின் அறிவுரைகளை நன்கு படித்து ஆராய்ந்தார். அந்த உரைகளைப் பிறநாட்டு மக்களுக்கும் தெரிவிக்க விரும்பினார்; பிற நாடுகளில் சமயப் பணி புரியவும் அவருக்கு விருப்பம் ஏற்பட்டது.

இத்தாலிநாட்டு இலக்கியங்கள், உளநூல்யாவற்றையும் கற்றுத் தேர்ந்தார். பிரெஞ்சு, கிரீக்கு, எபிரேயம், போர்ச்சுகீசியம் ஆகிய மொழிகளையும் பயின்றார். 1710ல் தமது நாட்டை விட்டுப் புறப்பட்டு இந்தியாவுக்கு வந்துசேர்ந்தார். முதலில் கோவாவை அடைந்தார். பின்னர்கேரளம் சென்று தமிழகம் வந்தார். தமிழகத்தில், தஞ்சை, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் எல்லாம் தங்கியிருந்து சமயப்பணி செய்தார். அக்காலத்தில் தமிழ்மொழி அவரைக் கவர்ந்தது. சுப்ரதீபக் கவிராயரிடத்திலிருபதுஆண்டுகள் தமிழ்கற்றார். தெலுங்கு, வடமொழி ஆகியவற்றையும் கற்றுத் தேர்ந்தார்.

தமிழின் அழகிலும் அருமையிலும் நெஞ்சம் பறிகொடுத்த பெஸ்கி, தமிழில் நூல்கள் எழுதும் அளவுக்கு வன்மைபெறத் தொடங்கினார்.

கம்பராமாயணம், சீவக சிந்தாமணி, திருக்குறள் ஆகிய இலக்கியங்களை ஊன்றிக் கற்ற அவர் ஆகிர்தமேரி சொல்லிய சூசையப்பர் வரலாற்றைத்தமிழில் காவியமாக்க முனைந்தார். அதுதான் 'தேம்பாவணி' ஆகும். இந்நூல் 36 படலங்களையும் 3615 விருத்தப் பாக்களையும் கொண்டது: பெருங்காப்பியத்துக்குரிய அனைத்தும் பெற்றது. தமிழ் மரபு வழுவாது செல்வது, ஏசுநாதரின் வரலாற்றையும் கிறித்தவசமயக் கொள்கையையும் எடுத்து இயம்புவது; பெஸ்கி அவர்களது பெரும்புலமைக்குச் சான்றாகத் திகழ்வது.

இந்நூலை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அவர் அரங்கேற்றிய போது, சங்கப்புலவர்கள் அகமகிழ்ந்து, இவரது தமிழாற்றலை வியந்து சமய தத்துவத்தைப் பாராட்டியதுடன் வீரமாமுனிவர் என்னும் பட்டத்தையும் இவருக்கு வழங்கினர். அன்று முதல் இயற்பெயர் மறைந்து வீரமாமுனிவர் என்னும் பட்டப்பெயரே சிறந்து விளங்குகிறது.

கொள்ளிட நதியின்வடகரையில் ஏலாக்குறிச்சினனும்ஊரில் மேரியம்மையின் ஆலயத்தை அமைத்து, அதனை அடைக்கல மாதா என்று அமைத்தார். அவ்விடத்திற்குதிருக்காவலூர் என்னும் பெயர் சூட்டினர். அடைக்கல மாதாவின் மீது பல்வேறு பாக்கள் புனைந்தார். அடைக்கலநாயகி வெண்கலிப்பா, அடைக்கலமாலை, திருக்காவலூர்க் கலம்பகம் அன்னையழுங்கல் அந்தாதி என்னும் நூல்களை யாத்தார். போர்ச்சுக்கீசிய நங்கையரான கித்தேரி அம்மாள் சமயத்து றையில் ஆற்றிய தொண்டினை அறிந்த வீரமாமுனிவர் அவர் மீது 'கித்தேரியம்மன் அம்மானை' என்னும் நூலைப்பாடினர்.

தமிழ்மொழி,மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் எளிமையாக இருக்கவேண்டும் என்று எண்ணிய முனிவர் உரைநடையை அறிமுகப்படுத்தினர். வேத ஒழுக்கம் என்னும் உரைநடை நூல்களை எழுதினர். நகைச்சுவையும் அறிவூட்டலும் ததும்பும் வகையில் ''பரமார்த்த குரு கதை'' என்னும் நூலை எழுதினர்.

அகராதி என்னும் அமைப்பு அக்காலத்தில் தமிழில் இல்லை. நிகண்டென்னும்பெயரில்செய்யுள்களின் வடிவில் தான் அகராதி இலங்கி வந்தது. அதனை எளிமையாக்கி பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு அதிகாரங்களைக்கொண்ட சதுரகராதி உருவாக்கினர். இன்றுவெளியிடப்படும் அகராதிகளுக்கெல்லாம் இந்தச்சதுரகராதிதான் தாய்!

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணமுடைய ''தொன்னூல் விளக்கம் என்னும் நூலை உருவாக்கினர்.

ஒன்பதினாயிரம் தமிழ்ச் சொற்களுக்குப் பொருள்விளக்கம் உள்ள, தமிழ் - இலத்தீன் அகராதியையும் நான்காயிரம் போர்ச்சுக்கீசியச் சொற்களுக்குப் பொருள் விளக்கம் உள்ள போர்ச்சுக்கீசியம்-தமிழ்- இலத்தீன் அகராதியையும் உருவாக்கினர்.

திருக்காவலூரில் தமிழ்க் கல்லூரி ஒன்றை நிறுவித் தாமே ஆசிரியராக இருந்து கிறித்தவ சமய அறிஞர்களுக்குத் தமிழ் கற்றுத் தந்தார்.

திருக்குறளின் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் லத்தீன் மொழியில் பெயர்த்தார். இலக்கிய வழக்கு, உலக வழக்கு ஆகியவற்றின் வேற்றுமை குறித்தும் லத்தீன் மொழியில் எழுதினர்.

தமிழ் எழுத்து வழக்கில் புதிய மாற்றத்தைச் செய்தவர் வீரமாமுனிவரே ஆவர். தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்த எ. ஒ. என்னும் எழுத்துக்களுக்குப் புள்ளியிடப்பெறின் அவை குறிலாகும் என்னும் பழைய வழக்கை மாற்றி எ. ஒ. என்னும் நெட்டெழுத்துக்களை வழக்கிற்குக் கொண்டுவந்தார். அவை புலவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இன்றும் வழக்கில் இருந்து வருகிறது.

## கால்டு வெல்

ஐரோப்பாவில் உள்ள அயர்லாந்து நாட்டில் கி.பி 1815ல் தோன்றியவர் கால்டுவெல்; பள்ளியில் சேர்ந்த நாள் முதல் கல்வியில்கருத்தூன்றிய அவர், பதினறு வயதிற்குள் ஆங்கில இலக்கிய நூல் பலவற்றைப் படித்து அறிவு பெற்றார். தமது தந்தையின் விருப்பப்படி ஓவியக் கலையையும் கால்டுவெல் கற்று வந்தார்.

தமது இருபதாம் வயதில் லண்டன் சமயத்தொண்டர் சங்கத்தில் அங்கம்பெற்று, கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் சேர்ந்து சமய நூல்களையும் ஐரோப்பிய மொழிகளில் உருவான நூல்களையும் கற்று, இரண்டாண்டுகளுக்குப் பின்னர் இளங்கலை தேர்வில் முதன்மையுறத் தேறிப் பரிசு பெற்றார்.

தமிழ்நாட்டு வரலாற்றை மாணவப்பருவத்திலேயே நூல்களின் வாயிலாக ஓரளவு அறிந்து வைத்திருந்த கால்டுவெல் - தமிழ்நாட்டில் தங்கி சமயப்பணிபுரிய விரும்பினர். லண்டன் சமயத் தொண்டுக் கழகத்தினரும் அவரைத்தேர்ந்தெடுத்து அனுப்பினர். புறப்படும்போது தமது அன்னையார் நோய் வாய்ப்பட்டிருந்தார். எனினும் கடமையாற்றுவதற்காக அவர் 1838ல் சென்னை நகருக்கு வந்து சேர்ந்தார்.

ட்ரூ என்னும் பாதிரியாரின் இல்லத்தில் அவர் தங்கினர். பாதிரியார் ஆங்கிலேயர் எனினும் தமிழ் மொழி குறித்து நன்குஅறிந்துவைத்திருந்தார். தமிழ் தென்னிந்திய மொழிகளில் மிகவும் பழமையானது; இலக்கிய வளம் உடையது; ஆய்வுக்குரிய அரிய தன்மை படைத்தது என்று கால்டுவெல்லிடம் அவர்கூறவே, தமிழைப் பிழையறப் படித்து ஆராய வேண்டும் என்னும் ஆர்வம் கால்டுவெல்லுக்கு ஏற்பட்டது.

சிதம்பரம் தஞ்சை, திருச்சி, திருவரங்கம், நீலகிரி, ஆகிய ஊர்களுக்கெல்லாம் சென்றார் பின்னர் கோவை, மதுரை, ஆகிய ஊர்களின் வழியாக நெல்லை மாவட்டம் சென்று, இடையான் குடியில் தங்கி கல்விப்பணியும் சமயப்பணியும் புரிந்தார்.

கிறிஸ்துவ வேதநூல்களான பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகியவற்றைத்தமிழிலே பெயர்த்தார்.

அவர் கல்லூரியில் பயின்ற காலத்தில் அவரது பேராசிரியர் சர் டேனியல் சான்போர்டு ஐரோப்பிய தென் மொழிகளான கிரேக்கம்-லத்தீன், ஜெர்மன் மொழி முதலியவற்றின் ஒப்பீடுகளை ஒப்பிலக்கண வாயிலாக உணர்த்தினர். அன்று முதல், தாமும் ஓர் ஒப்பிலக்கண நூலைச்செய்ய வேண்டும் என்ற எண்ணம் கால்டுவெல் லுக்கு இருந்துவந்தது.

தமிழகத்திற்கு வந்த பின்னர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென்னிந்திய மொழிகளைக் கற்பதற்கு ஏற்பட்ட வாய்ப்பைத் தக்க விதத்திலே பயன்படுத்தி இந்நான்கு மொழிகளுக்குள் இருக்கும் ஒப்பியல்புகளை ஆராய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை உருவாக்கினர்.

'வடமொழியில் இருந்து தான் தமிழ் தோன்றியது' என்று நெடுங்காலமாகச்சொல்லப்பட்டுவந்த கருத்தைஅடித்துநொறுக்கும் வகையில் ''திராவிட இனமொழிகள் தனித்தியங்கிவருபவை; வடமொழிக்கும் இவற்றிற்கும் உறவு முற்றிலும் கிடையாது'' எனத் தெளிவுபடுத்திய இந்நூல், மொழிநூல் அறிஞர்களுக்கும் பெரும் வழிகாட்டியாக திகழ்கிறது.

இவ்வாராய்ச்சி நூலை உருவாக்கியதற்காக, கிளாஸ்கோ பல்கலைக்கழகம், கால்டுவெல் அவர்களுக்கு டாக்டர் என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கியது. தமிழ் மக்கள், 'தமிழ்த் தாயின் தவப்புதல்வர்' என்றும் 'தமிழ்ப் பாதுகாவலர் என்றும் அவரைச் சிறப்பித்தார்கள். நற்கருணைத் தியான மாலை,தாமரைத்தடாகம் என்னும்நூல்களையும் அவர் எழுதினர்.

நெல்லை மாவட்டத்தின் வரலாற்றை எழுதி, சென்னை அரசிடமிருந்து 1000 ரூபாய் பரிசு பெற்றார். அந்நூல் 1881ல் வெளியிடப்பட்டது.

தமிழ் மொழியின் வேர்ச் சொற்களை மிகவும்ஆய்வு செய்தார். 'றைஸ்' என்ற ஆங்கிலச் சொல், தமிழ்ச் சொல்லான அரிசி என்பதன் திரிபே என்றும், ஹிப்ரு மொழியில் காணப்படும் 'துகி' என்னும் சொல்தமிழில்உள்ள'தோகை' என்பதன் சிதைவே என்றும் ஆய்ந்து கூறினர்.

புதை பொருள் ஆய்வுத்திறம் இவருக்குஇருந்தது. பாண்டியநாட்டின் பழங்கால துறைமுகமான கொற்கை இடைக்காலத் துறைமுகமான காயல் முதலியவற்றை ஆய்வுத்திறனுடன் விளக்கிக்காட்டினர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 22ம் ஆண்டில் (1879) நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கால்டுவெல் ஆற்றிய சொற்பொழிவு, அவர் ஒரு தமிழ்த் தொண்டர் என்பதை வலியுறுத்தியது. தூய தமிழ்த் தொண்டரான கால்டுவெல் 'இந்தியாவிலேயே உயிர்துறப்

(7-ம் பக்கம் பார்க்க)

## அருள்திரு ஜெயசீலன் தாயார் காலமானர்

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் வடபிராந்திய இயக்குநர் அருள்திரு ஆர்; ஜெயசீலன் அடிகளாரின் தாயார் திருமதி அப்பலோனியா இராசநாயகம் காலமாகிவிட்டார்.

அன்னரின் நல்லடக்கம் 21-1-91 புதன்கிழமை மாலை நடைபெற்றது.

## வெறிபிடித்த இலங்கை இராணுவம்

கொழும்பு எச்சலோன் சதுக்கத்திலுள்ள சிங்க ரெஜிமென்ட் பிரிவைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் சில இராணுவவீரர்கள் கொழும்பு காலி முகத்திடலில் ஒரு பெண்ணைக்கற்பழிக்க முயன்ற போது அவ்வழியே வந்த பொலிசார் தலையிட்டு அவர்களைக் கைது செய்தனர்.

இதனல், பொலிசாருக்கும் இராணுவத்தினருக்குமிடையே ஏற்பட்ட மோதலையடுத்து,கோட்டைப் பொலிஸ் நிலையத்தின் கண்ணடி சுக்கு நூறுக்கப்பட்டதோடு,உதவிப் பொலிஸ் அதிபரின் கார் ஒன்றும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. அவ்வேளை அங்கு கடமையில் இருந்த மூன்று பொலிசார் பலமாகத் தாக்கப்பட்டதினல், அவர்களில் இருவர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

# தலைவர் அமிர் கருத்திற்கு தமிழக ஏடு பாராட்டு!

**மலையகத் தமிழர்களின் பிரச்சனையைத் தீர்ப்பது சம்பந்தமாக மதுரை மகாநாட்டுக்குச் சென்றிருந்த தலைவர் அமிர் அங்கு வெளியிட்ட ஒரு கருத்தை தமிழகத்தின் 'தினகரன்' ஏடு பெரிதும் பாராட்டி வரவேற்றிருக்கிறது.**

அது தனது ஆசிரியத் தலையங்கத்தில் (17-1-81) எழுதியிருப்பதாவது-

அண்மையில் இலங்கை சென்றிருந்த இந்திய அமைச்சர் ஆன வெங்கட்ராமனும் இந்திரா காங்கிரஸ் பா. உ. ஆன கோசல்ராமும், இலங்கையில் இருந்து இன்னும் இங்கே வந்து சேர வேண்டிய இந்திய வம்சா வழியினரை எப்படி விரைவில் இங்கே வரவழைப்பது என்பது பற்றியும் இப்படி வந்து இருப்பவர்களுக்கும் இனிமேல் இங்கே வர விருப்பவர்களுக்கும் எப்படிப்பட்ட மறுவாழ்வப்ளிபுத் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்பது பற்றியும் தான் சிந்தனை செய்து இருக்கிறார்கள்- பேசியும் இருக்கிறார்கள். இந்தக் கண்ணோட்டம் உண்மையில் மெச்சத் தகுந்ததுதான். ஏனென்றால் அக்கரையில் இருந்து இக்கரைக்கு வருபவர்களுக்கு வசதி செய்து தருவது இலங்கை அரசுக்குத் தலைவலி. வந்தவர்களுக்கு வசதி செய்து தருவது இந்திய அரசுக்குத் தலைவலி. இந்த இரு அரசுகளும் தலைவலியோடு நின்று விடுகிறன. ஆனால் இலங்கை இந்திய வமிசாவழியினருக்கோ தலையே பறிபோகின்ற அனுபவம் தான் இக்கரையிலும் அக்கரையிலும்கிட்டி வருகிறது.

இந்தச் சூழ் நிலையில் தான் ஈழத் தலைவர் கூறி இருக்கும் புதிய கருத்தின் சுவையை நாம் சுவைக்கிறோம். இத்தனைக்கு அத்தனை என்ற விகிதாச்சார விவகாரம் தேவை இல்லை. மக்கள் விரும்புகிற நாட்டு குடியுரிமையை கொடுக்க இரு நாட்டு அரசுகளும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது அமிர்தலிங்கத்தின் திட்டம். இதனை டெல்லி ஆழமாகஆராயவேண்டும். இதற்கு இலங்கை மட்டும் சம்மதித்து விட்டால் இந்திய வமிசாவழியினரின் சிக்கல் அக்கணமே தீரும்.

# மேன்மைத் தமிழ் வளர்த்த...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பேன்' என்று சூளுரைத்தார். அதன்படி கொடைக்கானலில் உயிர் துறந்தார். அவரது தமிழ்த் தொண்டு இன்றும் அவரை உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறது.

## ஜி. யு. போப்

இங்கிலாந்துநாட்டின் வெஸ்லியன் திருச்சபையைச்சார்ந்த ஜான்போப்பு, கேதரின் யுக்ஞே தம்பதியருக்கு எட்வர்டு தீவில் 1820ல் பிறந்தார் ஜியார்ஜ்யுக்ளோ என்று வழங்கப் பெற்ற ஜி. யு. போப்

இளமையிலேயேசுறுசுறுப்பு, ஊக்கம் உழைப்பு, விடா முயற்சி முதலிய நற்பண்புகளுடன் திகழ்ந்த போப் கல்வியில் மிகுந்த நாட்டம் கொண்டார். சமய நூல்களை விரும்பிக் கற்றார். புதிய ஏற்பாடு - கிரேக்கமொழியில் இருந்தமையால் அதைக்கற்பதற்காக அம்மொழியைப் பயின்றார். தமிழ் மொழியின்சிறப்பைக் கேள்விப்பட்ட போப், தமிழகத்திற்கு வந்து தொண்டுசெய்ய விரும்பினார். அதனால் தமிழ்மொழியையும் நன்குகற்றார். பின்னர் வடமொழியையும் பயின்றார்.

வெஸ்லியன் குழுவின் சார்பில், கமயஊழியராக 1839ல் தமிழகத்திற்கு வந்து சேர்ந்தார். திருநெல்வேலியில்உள்ள ராயர்புரத்தை முதன்முதலாக அடைந்தார்: தஞ்சை, பெங்களூர் ஆகிய நகரங்களில் சமயப் பணியும் ஆசிரியப் பணியும் புரிந்தார். மகாவித்வான்இராமானுஜ கவிராயர் அவர்களிடம் தமிழ் கற்றார்: வேதசாஸ்திரி என்றபட்டமும் பெற்றார்.

சாயர் புரத்தில் சமயக் கல்லூரி ஒன்றினைத்துவக்கி-கல்வி, உணவு, உறையுள் ஆகிய மூன்றையும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கினார். தமிழ் இலக்கியம், எபிரேயம், ஆங்கில இலக்கியம், கணிதம், தர்க்க தத்துவம் வரலாறு ஆகிய பாடங்கள் அங்கே கற்பிக்கப் பட்டன. இவற்றில்பலவற்றை போப்பே கற்பித்தார்.

பள்ளிப் பிள்ளைகட்கு எளிய முறையில் தமிழ் இலக்கண உண்மைகளைக் கற்பிக்கும் எண்ணத்துடன் மூன்று இலக்கண நூல்களை வினா விடை முறையில் எழுதி வெளியிட்டார்.

மேனாட்டார் தமிழ் பயில்வதற்கு ஏற்றமுறையில் தமிழ்-ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ் அகராதி ஒன்றினைத் தயாரித்தார்.

தமிழ்ச் செய்யுட்களைத் தொகுத்து 'தமிழ்ச் செய்யுட் கலம்பகம்' என்னும் நூலை வெளியிட்டார்.

அவரது சமயப்பற்று - மறை நூலாராய்ச்சி ஆகியவற்றைப் பாராட்டி - காண்டர்பரி சமய குரு 'மறைநூல் அறிஞர்' என்னும்பட்டத்தை 1884ல் போப் அவர்களுக்கு வழங்கினார். அன்றுமுதல் டாக்டர் போப் ஐயர்என்று வழங்கப்பட்டார்.

திருக்குறளை உலகறியச் செய்த பெருமை போப் அவர்களையே சேரும். நாற்பதாண்டுகளாக அந்நூலைப் படித்தார். பல தமிழ் நூல்களின் துணையாலும் அதனை உணர்ந்தார். எல்லாக்குறட்பாக்களையும்ஆங்கிலத்தில்மொழிபெயர்த்தார். பல அருங் குறிப்புக்களையும் இணைத்தார். பன்முறையும் படித்துச் சுவைத்தற்குரிய முகவுரையை வரைந்தார் 1886 ல் இதனை வெளியிட்டார்.

குறளுக்கு அடுத்தபடியாக நாலடியாரைவிரும்பிய போப், அதனை உலக அறிஞர் படித்துப் பயன்பெறவேண்டும் என்னும் உணர்வுடன் மொழி பெயர்த்து 1893 ல் வெளியிட்டார்.

நாலடியாரின் முகவுரையில் அவர் குறிப்பிட்டுள்ள கருத்து போற்றுதற்குரியது. அது வருமாறு:

''தமிழ் இலக்கியங்களை இம்முறையில் வெளியிடுவதால் நன்மை விளையுமென்று நான் உறுதியாய்நம்புகிறேன் நாலடியாரைப் படிக்குங்கால் பல அரிய உண்மைகள் வெளியாகின்றன. தமிழ்மக்கள் ஒழுக்கத்தில் விருப்புடையவர்கள்: உண்மை அன்புள்ளவர்கள்; உயர்ந்த நோக்கமுடையவர்கள். இத்தகைய மக்கட்கு நற்காலம் தோன்றும் என்பது எனது நம்பிக்கை. திருக்குறளும் நாலடியாரும் தமிழர்களுக்கு முதன்மையை அளித்துள்ளன.''

திருவாசகத்தில் உள்ளம் பறிகொடுத்த போப் அவர்கள் அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1900 ஆண்டு ஏப்ரல் 24ஆம் நாளில் வெளியிட்டார். இந்நூல் போப் அவர்களின் 80வது வயதில் வெளியிடப்பட்டது என்னும் பெருமை பெற்றது. இதன் மூலமாக சைவசித்தாந்த நெறிகளை மேனாட்டவர் அறிந்து கொள்ள வழிபிறந்தது. புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களின் செய்யுட்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததுடன் மணிமேகலைக் கதையை ஆங்கில உரைநடையில் எழுதினார்.

தேமதுரத் தமிழோசையை உலகம் எல்லாம் பரவச்செய்த போப் அவர்களின் தொண்டினைப்பாராட்டி, இங்கிலாந்தில் இருந்த ராயல் ஏசியாடிக் குழு 1906ல் அவருக்குப் பொற்பதக்கம்வழங்கிச்சிறப்பித்தது.

தான் இறந்தபின்னர் தனது கல்லறையில் ஒரு தமிழ் மாணவன் என்ற சொற்றொடர் பொறிக்கப்பட வேண்டும் என்று கூறிச் சென்றார்.

இவ் விருப்பத்தை தமது நண்பர் ஜே. எம். நல்லசாமி என்பவருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தார் என்றால் செந்தமிழில் அவருக்கிருந்த அளவிட முடியாத பற்றுதெற்றென விளங்குகிறது அல்லவா?

## இரேனியஸ்

ஜெர்மனிநாட்டைச்சேர்ந்த இரேனியஸ் 1970ல் ரஷ்யாவில் பிறந்தார். இவரது முழுப் பெயர் சார்லஸ் தியோபிளஸ் எட்வர்டு இரேனியுஸ் ஆகும்.

தமது 22வது வயதில் கிறித்தவ சங்கத்தில் சேர்ந்து சென்னைக்கு வந்து சமயத் தொண்டாற்றினார், மகாவித்துவான் முகவை ராமானுஜ கவிராயரிடத்தில் தமிழ் கற்றார். பைபிளின் புதிய ஏற்பாட்டை தமிழில் பெயர்த்தார்.

வேதஉதாரணத்திரட்டுஎன்னும் நூல்ஒன்றினை உரைநடையில் எழுதினார். தமிழில்சொற்பொழிவாற்றவும் எழுதவும் வல்ல இவரை ஜி. யு. போப் அவர்கள் மிகவும் பாராட்டியிருக்கிறார்.

## சீகன்பால்கு

ஜெர்மன் நாட்டில் புல்ஸ்நித்ஸ் என்ற நகரில் 1683ல் பிறந்தபார்த்தலோமியாசீகன் பால்கு ஹாலிப் நகரில் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி கற்றார்.

அக்காலத்தில் தமிழகத்திலுள்ள தரங்கம்பாடியில்டென்மார்க்குக் காரர்கள் வணிகம் செய்து வந்தனர். அப்பகுதியில் கிறித்துவ மத போதனை செய்வதற்காக நான்காம் பிரடெரிக் மன்னன் ஆணைப்படி 1705ல் புறப்பட்டு வந்தார் சீகன் பால்கு.

தரங்கம்பாடியில் சிறுகிராமத்தில் திண்ணைப்பள்ளியில் தரையில் அமர்ந்து அரிச்சுவடி கற்றார். பின்னர் ஓலைச்சுவடிகளைப் பயின்றார்.

ஜெர்மன் நாட்டிலிருந்து அச்சு இயந்திரத்தையும் தமிழில் அச்சு எழுத்துக்களையும் செய்து, அவற்றுடன் காகிதத்தையும் அனுப்புமாறு ஏற்பாடு செய்தார். அவ்வியந்திரத்தைக் கொண்டு கிறித்தவசமய உண்மைகளை வெளியிட்டு பொது மக்களுக்கு வழங்கினார்.

தமிழ்-இலத்தீன் இலக்கணத்தையும், தமிழ்-இலத்தீன் அகராதியையும் அச்சிற் பதிப்பித்தார்.

முதன் முதலில் பொதுமக்களுக்குத் தமிழ் மொழியில் நூல்களை அச்சிட்டு வழங்கிய பெருமை சீகன்பால்கு அவர்களையே சேரும்.

## எல்லீஸ்

ஆங்கிலநாட்டில் பிறந்தவர் பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ் இவர்1796ல் இந்தியாவில்பணி செய்வதற்கு வந்தார். சென்னையில் வருவாய் வாரியத்தில் செயலாளராகப் பணியாற்றினார். சென்னைமாவட்ட ஆட்சியாளராகப் பத்தாண்டுகள் பணிபுரிந்த இவர், வடமொழியையும் விரும்பிக்கற்றார். இராமச்சந்திர கவிராயர் அவர்களிடமும் சாமிநாதபிள்ளை அவர்களிடமும் தமிழை நன்கு கற்றுக்கொண்டார்.

திருக்குறளுக்குச் சிறந்த விரிவுரை எழுதும் முயற்சியில் ஈடுபட்டார். அதுமுற்றுப்பெறாது போய்விட்டது. என்றாலும் அந்நூலில் அவர் தமது கருத்துக்கேற்பச் சில இடங்களில் உரை கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியங்களினின்றும் தக்க இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார்,

சென்னை அரசாங்கக் கல்விச் சங்கம் என்னும் அமைப்பு ஒன்றினை உருவாக்கினார். அதற்கு வேண்டிய பொருளுதவிகள் செய்தார்.

வீரமாமுனிவர் இயற்றிய நூல்களைஎல்லாம் தேடுவதற்கு ஏற்பாடு செய்தார்.

பழம் சுவடிகளைத் தேடிச் சேகரிப்பதில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார். அநேகசுவடிகளைச் சேகரித்து வைத்திருந்தார.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தைக் காணமிக விருப்புடன் சென்றார். பின்னர் தாயுமானவர் அடக்கமான இடத்தைக்காண்பதற்கு இராமநாதபுரம் சென்றார். தாயுமானவர் சமாதி முன்னர் நின்று ''இன்றைக்கிருப்போரை நாளைக்கிங்கிருப்பார் என்றெண்ணவோ திடமில்லையே'' என்ற தாயுமானவர் பாடலை நெஞ்சுருகப் பாடினார். எதிர்பாராத விதத்தில் அன்றைய தினமே மதுரையில் மறைவெய்தினார்.

அவர் சேகரித்துவைத்த ஏட்டுச் சுவடிகளின் அருமை அறியாத சமையலறை ஊழியன் ஒருவன் அவற்றைக் கொண்டு பல மாதங்கள் அடுப்பெரித்ததாகச் சொல்லப்படுகிறது.

## ஆள்பிடிக்கும் அரசாங்கம்!

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் லொறிகளை எல்லாம் ஆட்களை ஏற்றிக் கொண்டு யாழ் - இந்துக்கல்லூரிக்கு வந்து போகுமாறு அரசாங்கம் வற்புறுத்துகிறது.

பலநோக்குச் கூட்டுறவுச் சங்க லொறிகளை சிறிமா அரசாங்கம் பயன்படுத்திய பொழுது கூக்குரலிட்ட ஐக்கிய தேசியக்கட்சி இன்று அந்தத் தந்திரத்தையே கையாளுகின்றது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறிகளை அனுப்புவதற்கும் டீசல் எண்ணெய்க்கு காசு செலவழிப்பதற்கும் அவற்றுக்கு அதிகாரமில்லை. எனவே, அவை அனுப்பவேண்டியதில்லை. அனுப்பும் சங்கங்கள் மீது அச்சங்க உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்கமுடியும், எடுப்பார்கள் என்றும் எச்சரிக்கின்றோம்.

## மாசேதுங் மனைவி மரணத்தின் வாயிலில்!

மறைந்த சீனாவின் மாபெரும் தலைவர் மாசேதுங்கின் மனைவி, சியாங்சிங்கிற்கும், முன்னாள் சங்காய் மேயர் சாங்கன்சியோவுக்கும் இரண்டு வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

'நால்வர்குழு' என்று அழைக்கப்படும் பிரிவைச் சேர்ந்த இவ்விருவருக்கும் விதிக்கப்பட்டதண்டனை பற்றி வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு பேச்சாளர் அறிவித்தார்.

# 'சோதிடர்' சிறில் மத்தியூ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டப்பாணியில் அழகாகப் பேசியது யாரோ சிலருக்கு கேட்டிருக்கின்றது. சோதிடருக்கு வரவேற்பு கொடுத்து; குடும்பத்திற்கு தேவையான சிலதை பெற்றுக் கொள்ள வந்தவர்களுக்கு இப்படியெல்லாம் பொதுவாக பேசியது பிடிக்காமல் இருந்ததும்; ஏதோ ஒரு வகையில் உண்மைதான்,

"இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? இடையில் வந்த குரங்குதான் ஆண்டால் என்ன? என்று எண்ணுவோர்களை சிறில் மத்தியூ சோதிடத்தின் மூலம் இனம் காண முடியாதது மனம் வருந்தக் கூடியதே! யானைக்கும் அடி சறுக்கும் என்பார்களே அது நடந்து விட்டது போலும்.

"நல்ல பலன் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டுமானால் கிரக சாந்தி செய்ய வேண்டும். ஆகவே கூட்டணித் தலைமையைவிட ஐக்கிய தேசியக் கட்சியோடு சேருகின்ற வேறு தலைமையை உருவாக்குங்கள்" என்று மேலும் சோதிடர் கூறினார்.

"ஐக்கிய தேசியக்கட்சியோடு சேர்ந்து விட்டது கூட்டணி" என்று பிரச்சாரம் பண்ணும் "தீவிரவாதிகள்" என்று தங்களைக் கூறுவோரின் பேச்சையும்; சோதிடரின் பேச்சையும் ஒப்பிட்டுப்பார்க்க சிலருக்கு எதுவுமே புரியவில்லை. ஆனால் சிறிலங்கா அரசைப் பற்றி தீவிரவாதிகள் தெரிந்ததைவிட சிறில் மத்தியூ சோதிடருக்கு அதிகம் தெரிந்தும் இருக்கும்; புரிந்து இருக்கும்.

"தமிழீழக் கோரிக்கை ஒரு போது நிறைவேறாது" என்று சோதிடர் கூறியதும் தான் தாமதம்; கரகோசம் பக்கத்தில் இருப்பவர்களுக்கு கேட்கும்படி இருந்தது. இவ்வாறு "தனிநாடு கிடைக்காது. கூட்டணி நிலைக்காது" போன்ற பெரிய கருத்துகளை சொல்லுகின்ற பொழுதெல்லாம் கரங்களைத் தட்டுவது என்பது ஒருவித மரபு. அந்த சந்தர்ப்பங்களில் உணர்ச்சி வசமாக சோதிடர் சிறில் மத்தியூ சொற்பெருக்காற்றுவார். அப்படி ஆற்றினால் நிச்சயம் சோதிடரை வரவழைத்தவர்களுக்கு குப்பை கூட்டும் பலனுவது உண்டு.

"முடிவில் சோதிடர் சிறில் மத்தியூ தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவளித்தால் 24 மணி நேரத்தில் சிறிலங்காவில் அரசாளும் அரசாங்கம் நிலைக்காது" என்ற கருத்தையும் மிகக் தெளிவாகக் கூறினார்.

அப்பொழுது தான் புரிந்தது சிறிலங்கா அரசாங்கம் நிலைக்காது என்பதற்காகவே தமிழீழம் மலராது என்று கூறியிருக்கிறார், தமிழ் மக்களின் எதிர்காலத்தை கூற முனைந்த போது சிறில் மத்தியூ தன் இன உணர்ச்சியையும் கலந்து கூறியதினால் சோதிடத்தில் மிகப் பெரிய தவறு ஏற்பட்டு விட்டது.

சிறிலங்காவில் யார் நிலைத்தா லென்ன? நிலைக்கா விட்டால் என்ன? தமிழீழம் அவர்கள் பிடியிலிருந்து அகன்றால் போது. பாவம் சிறில் மத்தியூ அவருடைய சோதிட அரசாங்கம் நிலைக்காது என்பதை தன் பேச்சின் மூலம் நிரூபித்து விட்டார். அவர் தமிழ் மக்களின் எதிர் கால்லத்தை பார்ப்பதை விட சிங்கள அரசாங்கம் இனியும் ஆள முடியுமா? என்று தன்னுடைய எதிர்காலத்தை பார்ப்பது தான் இனிமேல் செய்ய வேண்டிய புத்திசாலித் தனமான காரியமாகும்.

# இராசதுரை எந்தத்துறை?

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் திரு. செ. இராசதுரை பா. உ. எந்த அமைச்சுக்குப் பொறுப்பென்று தெரியாமல் தமிழக மக்கள் திண்டாடுகின்றார்கள்.

இலங்கையில் உள்ள ஒருசில பிரதேசங்களின் அபிவிருத்திக்கு மட்டும் பொறுப்பாக உள்ள இவர், இந்துசமய கலாசார, தமிழ்மொழி அமுலாக்கல் துறைக்கும் பொறுப்பானவர் என்று இங்கு கூறப்படுகின்றது.

ஆனால், இந்தியாவில் (தமிழகத்தில்) 'இலங்கை கல்வி அமைச்சர் இராசதுரை என்று இவரை நன்கறிந்த முதல்வர் எம். ஜி. ஆர் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். இதனால்தான் தமிழகமக்கள் 'இலங்கை இராசதுரை' எந்தத்துறை (அமைச்சு)க்குப், பொறுப்பு என்று கேட்கின்றார்கள்.

எம். ஜி. ஆரின் பேச்சுக்குப் பின் இலங்கையிலும் இந்தச் சந்தேகம் தலைதூக்கியுள்ளதாக அறியப்படுகின்றது!

# ஆணிவேரையே கல்லி.....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சிக் கழகம் டில்லியில் உருவாயிற்று. உருவான கழகத்தின் செயலாளராகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதோடு, 1966 இல் முதலாவது உலகத் தமிழ்மாநாட்டைச் சிறப்பாக நடத்திய முதல் பெருமை தனிநாயகம் அவர்களுக்கே உரியது.

இரண்டாவது மாநாடு நடைபெற்ற போதே உ. த. ஆ. கழகம் வழக்கமான "தமிழ் தடத்தில்" நடைகிளம்பிவிட்டது. அதாவது, மெய்மையான தமிழ் ஆர்வலர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள்; ஆராய்ச்சிக் கழகம், பத்விப் பெருமையும் பணப் பெருமையும் மட்டுமே உடைய யாரிடமோ சென்றுவிட்டது. மூன்றாவது மாநாடு நடந்த போது, தமிழ் அறிஞர்கள் என்ற பெயரில் தமிழகத்து அரசியல்வாதிகளும் அதிகாரிகளுமே ஆராய்ச்சியை ஆக்கிரமித்துக் கொள்ளும் நிலை உருவாகி விட்டது.

இந்தக் கெடுபோக்கிலிருந்து தமிழராய்ச்சியை விடுவித்திட வேண்டும் என்ற எழுச்சி நாலாவது மாநாட்டில் தலைகாட்டியது. சிறிலங்காஅரசு யாழ்ப்பாண மாநாட்டுக்கு ஆதரவு தரவில்லை என்று தெரிந்ததும் தமிழின் பெயரால் சவ்கரியம் தேடும் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், வணிகர்களும்,---கடல்தாண்டி ஈழம் செல்லத் துணியாமல், இக்கரையிலேயே நின்றுவிட்டார்கள். இதனால், நாலாவது (யாழ்ப்பாண) மாநாடு நல்லதோர் ஆராய்ச்சி மாநாடாக அமைய முடிந்தது. உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழக (1964) உருவாக்கத்துக்கு மூல ஊட்டமாக நின்ற கா. பொ. இரத்தினம் முதலான நால்வரும் இந்த மாநாட்டில் பங்குகொண்டார்கள்; அவர்களுக்கு, அங்கே உரிய் சிறப்பிடம் அளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆணி வேரைக்கல்லிஎடுத்து விட்டால் மரம் ஆட்டம் கண்டுவிடுகிறது. அதுபோலவே, ஓர் இயக்கத்தின் தோற்றத்துக்கு மூலமானவர்களை ஒதுக்குவதால், அந்த இயக்கத்தின் அடிப்படை நோக்கமே திசை திரும்பிவிடுகிறது. எந்த நோக்கத்துக்காக உலகத் தமிழ் ஆராய்ச்சிக்கழகம் உருவாக்கப்பட்டது என்பது, அதைப் பற்றிச் சிந்தித்துத் திட்டமிட்டு அதனை உருவாக்கியவர்களின் இதயத்திலேதான் தெளிவாக இருக்கும், மற்றவர்களெல்லாம், ஏதேதோ காரணங்களாலேயே கழகத்தில் சேர்ந்திருப்பார்கள். இப்படி, (பின்னால்) வந்து சேருகிறவர்களின் இதயத்திலும் ஆராய்ச்சிக் கழகத்தின் சீரிய நோக்கம் ஊன்றிப் படர்ந்திட வேண்டுமானால், கழகத்தை நிறுவியவர்கள் முதன்மைப்படுத்தப்பட்டுஅவர்களின் வழிகாட்டுதலில் மற்றவர்கள் பயிற்சி பெற வேண்டும். இந்த நெறிமுறை புறக்கணிக்கப்பட்டதாலேயே, "இங்கே உள்ள சிலபேர், வேறு நாடுகளிலிருந்து வரும் சிலபேருடன் வணிக உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளவே உ. த. ஆ. கழகம் பயன்படுகிறது" என்று பலர் பழிக்கின்ற நிலை உருவாகி விட்டது. தமிழாராய்ச்சியின் பேரால், அரசியல்காரர்கள் என்னென்னவோ செய்து ஆராய்ச்சி நடைபெறுகிறது என்ற எண்ணமே இல்லாதபடி செய்திடும்படியான தவறு நிகழ்வதற்கும் இதுவே காரணம்.

வாழும் மொழியான தமிழின் பெயரால் நடைபெறும் ஆராய்ச்சியிலே அரசியலாரும் பொதுமக்களும் ஆர்வம் காட்டுவதிலே தவறுஒன்றும் இல்லை. அந்த ஆர்வம் இருக்கவே வேண்டும். ஆனால், அந்த ஆர்வம், "முன்னது எது, பின்னது எது?" என்கிற தெளிவைச் சாய்த்திட இடமேற்பட்டு விடவே கூடாது.

"உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின்முதல்வர்கள் முதன்மைப்படுத்தப்பட்டு இக்கழகத்தின் அடிப்படைநோக்கம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். என்னும்இந்தக்கருத்துமுன்பே சுட்டிக் காட்டப்பட்டிருக்க வேண்டாமா?" என்பீர்களோ? உங்களுடைய இந்தக் கேள்விக்கே இடமில்லாமல், - 1968 மாநாடு முடிந்ததும் வெளிவந்த "உலகத் தமிழ்", என்னும் புத்தகத்தில், 1974 மாநாடு முடிந்ததும் வெளிவந்த "தமிழ் மாநாடு" என்னும் புத்தகத்திலும் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டது. ஏன் 5வது மாநாட்டுக்காகத் தமிழக அரசு நியமித்த தனி அலுவலருக்கு 3-8-1979லேயே இச்செய்தி விரிவாக நினைவூட்டப்பட்டுள்ளது.

# கூட்டணியில் யூ. என். பி. ஆதரவாளர் இணைகிறார்கள்!

கல்குடாத் தொகுதி த. வி. கூட்டணியின் மத்திய கிளைக் கூட்டம் அமைப்பாளர்திரு. சி. சம்பந்தமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவர் அதில் பேசும்போது - கௌரவ உள்நாட்டு அமைச்சரின் அநீதியான நடவடிக்கைகளைக் கண்டித்ததுடன், சில பிரச்சினைகளை தலைவர்கள்மூலம் தீர்த்து வைத்த செய்திகளையும், தீர்வுகளையும் விரிவாக எடுத்துரைத்தார்.

கட்சியின் புதிய அமைப்புத் திட்டத்தின்படி கிராமசேவையாளர் - பிரிவுக்கிளை, உதவி அரசாங்கஅதிபர் பிரிவுக்கிளை, மாவட்டக்கிளை என்ற அடிப்படையில் இயங்கும் எனவும், கிராமயாத்திரையின் போது புதியமுறை கிளைகள் அமைக்கப்படும் என்றும், புதியஅங்கத்தவர்களைச் சேர்க்க மத்தியகுழு உறுப்பினர்கள் தீவிரமாக உழைக்க வேண்டும் எனவும் அங்கிருந்தவர்களைக் கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர் பேசுகையில், கடந்த சூறவளிக்குப்பின் தொகுதியில் சேதமடைந்த அரசாங்க தாபன கட்டடங்கள் திருத்தியமைககப் படவில்லை. அத்தோடு, தொகுதியில் எந்தவித அபிவிருத்தி திட்டங்களும் நடைபெறவில்லை. உள்நாட்டு அமைச்சர் எம்மைத் திட்டித் தீர்ப்பதிலே தனது காலத்தைக்கழிக்கிறார் என எடுத்துக்கூறியதிரு. சம்பந்தமூர்த்தி இதன் காரணமாக பல ஐ. தே. க ஆதரவாளர்கள் எம்மைநோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களை நாம் நேசக்கரம் நீட்டி ஏற்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.


சாந்தி (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

மகத்தான பொங்கல் வெளியீடு

சிவாஜி கணேசன் நடித்த

## ராஜராஜ சோழன்

(புத்தம் புதிய பிரதி) (சினிமாஸ்கோப் கலர்)

விரைவில் எதிர்பாருங்கள்!

எஸ். பி. வீரப்பா அளிக்கும்

திசை மாறிய பறவைகள்

(வண்ணச் சித்திரம்)



ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 10-30, 2-15, 6-00 9-30

கடைசி வாரம்!

ஜெய்கணேஷ், சுந்தரராசன், நம்பியார்,
கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீ பிரியா, முத்துராமன்
மற்றும் பலர் நடித்த

## சுப்ரபாதம்

(பக்திப் பரவசம் நிறைந்த சித்திரம்)

(ஈஸ்ட்மன் கலர்)



## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

கிராமிய வங்கி வழங்கும் ஒரு அரிய சந்தர்ப்பம்!

300 ரூபாவுக்கு -- 350 ரூபா

முப்பது மாத முடிவில் 450 ரூபா.

முதல் சேரும் ஆயிரம் பேர்களில் அதிஷ்டசாலிகளுக்கு பணப்பரிசும் காத்திருக்கிறது.

மிகச் சுலபமான முறையில் மாதாந்தம் பணத்தைப் பெருக்க அரிய சந்தர்ப்பம்!

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எக்கிளைகளிலும் மாதாந்தம் 10 ரூபா செலுத்தி இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

- 30 மாதங்கள் தொடர்ந்து 10 ரூபாவீதம் செலுத்தி வர வேண்டும்
- ஒருவர் 10 ரூபா பெறுமதியான எத்தனை பங்குகளும் எடுக்கலாம்
- சங்கத்தினால் வழங்கப்படும் பணப்பத்திரத்தைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்


உதயசூரியன் வெளியீட்டகத்தால் த..ாரிக்கப்பட்டுயாழ். புனிதவளன் கத்தோலிக்கஅச்சகத்தில் 30-1-81ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.